# தமிழ் கம்யூனிஸ்டுகள் ஐந்தாம்படையாக

# இயங்குவர்!

## விடுதலை உணர்ச்சியை மட்டம்தட்ட சூழ்ச்சி!

ஈழத்தமிழகத்தில் வி. பொன்னம்பலத்தின் தலைமையில் திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சியினர் ஓர் ஐந்தாம் படையாக இயங்கவிருக்கிறார்கள்.

தமது பிரதேசத்தை தாமே ஆள வேண்டும் என்ற தமிழ்பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கோரிக்கைக்கு எதிராக—தமிழ் மக்களின் விடுதலை உணர்ச்சியை மழுங்கடித்திடச் செய்யும் விதத்தில்—தீவிர பிரசாரத்திலீடுபடுவது என்று வட பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளதாம்.

தனிச்சிங்களச் சட்டத்தை தமிழ் மக்கள் தொடர்ந்து எதிர்ப்பதால் எதுவித பயனுமில்லையென்றும், தனிச்சிங்களம் ஆட்சி மொழியாக்கப்பட்டிருப்பதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு அமைதியடையவேண்டுமென்றும் கம்யூனிஸ்ட் கட்சி பிரசாரம் செய்யவிருக்கிறதாம்.

சிங்களத்தை தமிழ் மக்களிடம் புகுத்தும் பொறுப்பை வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பௌத்த மதத்தை அரசாங்க மதமாகவும், தனிச்சிங்களத்தை அரசியல் மொழியாகவும் கொண்டுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு ஆதரவாக

(11ம் பக்கம் பார்க்க)

## கலாசாரப் பாலைவனமாக காட்சிதரும் பத்திரிகை கடைகள்

“முன்னர் தமிழ்ச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் விற்பனை செய்யப்படும் கடைகளுக்கு சென்றால், ஆங்கு கண்ணைக் கவரும் விதத்தில் அழகாகத் தொங்க விடப்பட்டிருக்கும் தமிழ் நாட்டு சஞ்சிகைகளைப் பார்த்துப் பார்த்தே பரவசப்படக்கூடியதாயி

(11-ம் பக்கம் பார்க்க)


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலைபேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2002, மார்கழி 18 உ (2-1-72) ஞாயிறு 1391 துல்கஃதா 14 புத்தகம் 25 இதழ் 6


## தமிழர்களின் கல்வித் தரத்தை வேரறுக்க

# திட்டமிட்ட சதி!

## நாடாளுமன்றத்தில் செல்வா குற்றச்சாட்டு!

தமிழ் பேசும் மாணவர்களின் கல்வித்தரத்தை வேரறுக்ககல்வியமைச்சு திட்டமிட்டுசெயலாற்றி வருவதாக நாடாளுமன்றத்தில் தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் கல்வி அமைச்சர்மீது பாரதூரமான குற்றச்சாட்டு ஒன்றை பகிரங்கமாகச் சுமத்தியுள்ளார்.

தமிழ் பேசும் மாணவர்களை பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு தெரிவு செய்வதில முறைகேடுகளும் பாரபட்சமும் காட்டப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நடாளுமன்றத்தில் பலத்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ள தமிழரசுத் தந்தையின் உரை முழுவதையும் இவ்விதழின் இரண்டாம் பக்கத்தில் காண்க!



## மோசடி?

“கதிர்காமத்தில் இயங்கும் இந்து அறநிலைய மொன்றின் கணக்கு வழக்கில் பெரும் மோசடி ஒன்று நிகழ்ந்திருக்கிறதா?

“மேற்படி அறநிலையத்தை நிர்வகிப்பவர்கள் மக்களின் நம்பிக்கைச்சொத்தை விழுங்கி ஏப்பம் விடுகிறார்களா?

“இல்லா விட்டால்-குறித்த அறநிலையத்தின் கணக்கு வழக்கில் ஒன்றுக்குப் பத்தாக செலவினங்கள் காட்டப்பட்டிருப்பதேன்?

“ஏறத்தாழ ரூபா மூவாயிரத்துக்குள் வாங்கக்கூடிய அண்டாக்களுக்கு ரூபா 9000/-கணக்கு காட்டப்பட்டிருப்பதேன்?

“கட்டடம் வெள்ளையடித்தல், திருத்துதல் வேலைகளுக்கு எப்படித்தான் செலவழித்தா

(11ம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்புத் திட்டம் மூலம் தனிச் சிங்களத்தில்!!

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தயாரித்துள்ள புதிய அரசியல் திட்டம் தனிச் சிங்களத்திலேயே எழுதப்பட்டிருக்கிறது. சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கும் அரசியலமைப்புத் திட்டமே அதிகார பூர்வமானதாகவும், மூலப்பிரதியாகவும் இருக்கப்போகிறது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்புக்கள் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அரசியல் சட்ட விதிகளையொட்டி கருத்து முரண்பாடுகள் எழுந்தால், சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கும் மூலப் பிரதியுடனேயே ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். மொழி பெயர்ப்பு அதற்குப் பயன்படாது. நீதிமன்றத்திலும் சிங்களத்தில் எழுதப்

(11ம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு வாழ்த்து!

சுதந்திரன் வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் ஆகியோருக்கு நமது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

## சிங்கள ஆசிரியர் நியமனத்தில் பொய்ப்பிரசாரம் அம்பலம்!

தமிழுக்கு சட்டபூர்வமான அரசியல் பாதுகாப்பு இந்நாட்டில் ஏற்படும் வரை சிங்களத்தைப் படிப்பதில்லை என்ற தமிழ் மக்களின் வைராக்கியமான முடிவை தகர்த்தெறியும் சதிநோக்குடன் கிழக்கிலங்கையிலுள்ள சகல தமிழ் பாடசாலைகளுக்கும் சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுவிட்டதாக கல்வியமைச்சு அதிகாரிகளும் தமிழ்த் துரோகி இனபதியாருமாகச் சேர்ந்து ஒரு பிரசாரத்தை சிலகாலத்

(11-ம் பக்கம் பார்க்க)

## தலையிருக்க வாலாடும் அதிசயம்!

தனிச் சுதந்திரக் குடியரசாக மலர்ந்துள்ள பங்களாதேஷை ஆதரித்து இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒன்றைத்தவிர இலங்கையிலுள்ள வேறு எந்த ஒரு அரசியல்கட்சியும் கட்சி ரீதியாக இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய நான்கு கட்சிகளில் எதுவும் பங்களாதேஷை ஆதரித்து கட்சி

(11ம் பக்கம் பார்க்க)

## பங்களா தேஷ் பிரச்சினையில் அஸீஸ் மீது அதிருப்தி!

'பங்களாதேஷ்' பிரச்சினையில் இ. தொ. கா. தலைவர் ஜனாப் அஸீஸின் நிலை என்ன? பங்களாதேஷைப் பாராட்டி ஜனாப் அஸீஸ் இதுவரை இ. தொ. கா. சார்பில் வாழ்த்துத் தெரிவிக்காததேன்? மேற்கு பாகிஸ்தானையே அஸீஸ் ஆதரிக்கிறாரா?

—இவ்வாறு குமுறும் உள்ளத்துடன் கேட்கிறார்கள் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள்.

“பாக்—இந்திய யுத்தத்துக்கு முன், பாகிஸ்தானுக்கு ஆதரவு திரட்டுவதற்கென யெஹியாகானின் பிரதிநிதியாக திரு. ரோய் என்பவர் இலங்கை வந்திருந்தார். அப்போது அவருக்கு இங்குள்ள பாகிஸ்தான் தூதரகம் ஒரு விருந்து கொடுத்து கௌரவித்தது. அந்த விருந்தில் இந்திய வம்சாவளியினரான தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதி தாமேயென்று கூறிக்கொள்ளும் ஜனாப் அஸீஸும் குதூகலத்துடன் கலந்து கொள்ளக் காணப்பட்டார்.

“இதன் பின்னர் இந்தியா—பாகிஸ்தான் யுத்தம் ஏற்பட்டு இப்போது பங்களாதேஷும் உருவாகிவிட்டது. பங்களாதேஷ் அரசுக்கு பாராட்டு தெரிவித்து இங்கிருந்து பலர் செய்திகள் அனுப்பி வருகின்றனர். மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் பங்களாதேஷ் வெற்றியை பாராட்டுகின்றனர்.

(11ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் எழுதும்

### 'அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்'.

தொடர் கட்டுரை இவ்விதழில் ஆரம்பமாகிறது!

## வங்க மொழி ஆட்சிமொழி ஆனது!

விடுதலைபெற்று சுதந்திர வங்க நாடு அமைத்துக் கொண்ட வங்க மக்கள் முதலில் செய்த புனிதமான பணி என்ன தெரியுமா? வங்கத்தில் இதுவரை காலமும் ஆட்சிமொழிகளாக இருந்து வந்த உருதுவையும், ஆங்கிலத்தையும் அரியணையிலிருந்து துரத்தி விட்டு, தங்கள் இன்னுயிராம் வங்க மொழியை சுதந்திர வங்கத்தின் ஆட்சிமொழியாக்கியது தான்!

ஈழத்தில் தமிழன்னையை ஆட்சி மொழியாக்க போராடி வரும் நாம் வங்கமொழிக்கு கிடைத்த பெருமையை எண்ணி பெருமைப்படுகிறோம்! சுதந்திர வங்கத்தின் ஆட்சிமொழியாக வங்கம் வந்தது போல்—சுதந்திரத் தமிழரசின் ஆட்சி மொழியாக சுந்தரத் தமிழ் வரும் காலம் காணப்போராடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எண்ணம்

## தமிழரசுத் தந்தை சுட்டிக்காட்டிய உண்மை

இந்நாட்டு மக்களின் — குறிப்பாக தமிழ்பேசும் மக்களின் கல்வித் தரத்தை வேரறுத்துச் சீரழித்து, தமிழ் பேசும் எதிர்காலச் சந்ததியினரின் அறிவுத்துறை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் திட்டமிட்ட பல சதி நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது.

ஒரு சில ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காக தகுதியற்றவர்களை — திறமையற்றவர்களை ஆசிரியர்களாக நியமித்து, இன்று கல்விக்கூடங்களில் பயின்றுவரும் இந்நாட்டின் வருங்காலப் பிரஜைகளாக விளங்கப்போகும் மாணவச் செல்வங்களின் கல்வித்துறை முன்னேற்றத்தை பாழடிப்பதைவிட பயங்கரமான செயல் வேறொன்றுமில்லை.

இந்த உண்மையை மனதில் கொண்டுதான் நமது தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் கல்வியமைச்சு மானியம் மீது உரையாற்றியபோது பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சியாளர்களை தெரிவுசெய்வதில் நடைபெறும் சீர்கேடுகளையும் தவறுகளையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழரசுத்தந்தை சுட்டிக்காட்டிய கருத்தினை — எடுத்துரைத்த வாதத்தை புரிந்துகொள்ளமுடியாமலோ — அல்லது புரிந்துகொள்ளாததுபோல நடித்துக்கொண்டே முஸ்லிம் பா. உ. க்கள் சிலர், தமிழரசுத் தந்தை முஸ்லிம் — தமிழர் என்ற இனவாதத்தை கிளப்புவதாகவும், முஸ்லிம்கள் முன்னேறுவது கண்டு பொறுக்கமுடியாமல்தான் செல்வா இப்படிக் கூறுவதாகவும் கதையளந்திருக்கிறார்கள்.

உண்மையில், முஸ்லிம், தமிழ் என்று தமிழ் பேசும் மக்களைக் கூறுபோட முனைபவர்கள், தந்தை செல்வாவைக் கண்டிக்கத் துணிந்த முஸ்லிம் பா. உ. க்களும், கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் அவர்களுமே!

தமிழரசுக்கட்சி, இந்நாட்டு இஸ்லாமியத் தமிழர்களை பொறுத்தவரை அவர்களை என்றுமே மறந்ததில்லை — ஒதுக்கியதில்லை — பாரபட்சம் காட்டியதுமில்லை. நான் இனத்தால் — பேசும் மொழியால் தமிழன்; மதத்தால் மட்டும் இஸ்லாமியன் என்கின்ற கருத்துக்கொண்ட ஓர் இஸ்லாமிய சமுதாயத்தை காணவேண்டுமென்பதே தமிழரசுக்கட்சியின் ஆசையாகும்.

இந்நாட்டு இஸ்லாமிய மக்களின் தலைவர்கள் என்று கூறிக்கொள்வோர், சிங்கள ஏகாதிபத்தியத்திடம் அற்ப சலுகைகளுக்காக கையேந்தி, இஸ்லாமிய மக்களை மறந்திருந்த காலத்தில் — பரம்பரை பரம்பரையாக இஸ்லாமிய மக்கள் வாழ்ந்துவரும் கிழக்கு மாகாண மண்ணில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்ற நேரத்தில் அந்த அநீதிக்கு எதிராகப் போராடி சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தி தமிழ் பேசும் • இஸ்லாமியரது மண்ணைக்காத்தது தமிழரசுக்கட்சிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையாக வாழ்ந்துவந்த மக்களை, முஸ்லிம்கள், தமிழர்கள் என்று கூறுபோட்டு முதலில் பேசத்தொடங்கியவர்கள் துரதிருஷ்டவசமாக முஸ்லிம் தலைவர்கள் என்று கூறப்படுபவர்களே! ஏனைய தமிழ் மக்களுடன் இணைந்து நின்ற இஸ்லாமியத் தமிழர்களை தனியே பிரித்தெடுத்து சிங்கள மக்களுடன் இணைக்கவேண்டும் என்ற சதி நோக்குடன் இவர்கள் செயல்பட்டனர்; இன்றும் செயல்பட்டு வருகின்றனர்!

முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம்களே ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்றும், முஸ்லிம்களின் போதனா மொழி சிங்களமாக இருக்க வேண்டுமென்றும் கூறி பிரிவினைக் கருத்துக்களை முதலில் விதைத்தவர்கள் முஸ்லிம் தலைவர்கள் என்று கூறப்படுபவர்களே!

இவர்கள் தான் தமிழரசுத் தந்தைமீது கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்—தந்தை அவர்கள், தமிழ், முஸ்லிம் என்று இன அடிப்படையில் பேசுவதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் தந்தை அவர்கள் பேசியதென்ன? அவர் எடுத்துரைத்த கருத்துத்தான் என்ன?

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுப்பப்படும் இஸ்லாமிய மாணவர்களுக்குப் பிரவேசப் பரீட்சையோ, பயிற்சிகால முடிவில் நடத்தப்படும் இறுதிப் பரீட்சையோ நடத்தப்படுவதில்லை; பயிற்சிகால முடிவில் சோதனை எதுவுமின்றித் தராதரப் பத்திரம் வழங்கப்படுகிறது; இதனால் தமிழ் பேசும் பிள்ளைகளுடைய கல்வித் தரம் சீர்கெடுகிறது என்பதுதான் தந்தையின் குற்றச் சாட்டாகும்; இதனை கல்வியமைச்சர் கூட மறுக்க முன்வரவில்லையென்பது இங்கு குறிப்பிடத் தக்கது;

மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு நல்ல ஆசிரியர்களுடையது. நல்ல ஆசிரியர்களை உருவாக்கும் பொறுப்பு பயிற்சிக் கலாசாலையினுடையது. ஆனால் பயிற்சிக்கலாசாலை அமைச்சரின் தலையீட்டால்—அரசியல் காரணங்களுக்காக—தரம் குறைந்த ஆசிரியர்களை உற்பத்தி செய்யுமானால், அதனால் சமுதாயத்துக்கு கேடு ஏற்படுமே தவிர நன்மை விளையுமா?

இன்று சில நூறு இஸ்லாமிய இளைஞர்களுக்கு ஆசிரிய வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காக—அவர்களது தராதரத்தைப் பற்றி அணுவளவும் சிந்திக்காது ஆசிரிய வேலை கொடுக்கப்படுமானால் — இந்தத் தரங் குறைந்த ஆசிரியர்களிடம் கல்வி பயிலப் போகும் வருங்கால இஸ்லாமிய மாணவர்களின் நிலையென்ன? இதனால் பெரிதும் பாதிக்கப்படப் போகிறவர்கள் அவர்கள் அன்றோ? இதனை முஸ்லிம் தலைவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்வோர் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

# பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையில்தரமற்றவர்களுக்கு இடமளிப்பதேன்?

## நாடாளுமன்றத்தில் செல்வா பேச்சு

''கல்வியமைச்சுடன் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றுள் ஒன்றைப் பற்றியே இங்கு ஆராய விரும்புகிறேன்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் தமிழ் பேசும் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வது சம்பந்தமாக அமைச்சுக்கு எதிராக ஒரு குற்றச் சாட்டைச் சுமத்த விரும்புகிறேன்.

பிரவேசப் பரீட்சையிலும் பயிற்சி முடிவின் இறுதியில் வழமையாக நடத்தப்படும் இறுதிப் பரீட்சையிலும் சித்தியடைய முடியாத இஸ்லாமிய ஆசிரியர்களுக்கு அமைச்சு பயிற்சியளித்து வருகிறது.

சில காலத்துக்கு முன் இஸ்லாமியப் பாடசாலைகளில் இஸ்லாமியரல்லாத ஏனைய தமிழ் ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வந்தனர். இதற்குக் காரணம் இஸ்லாமியர்களின் தவறு அல்ல. அவர்களில் திறமை படைத்த இளைஞர்கள் பலர் வியாபாரத்தை நாடிச் சென்று விடுகிறார்கள். எஞ்சியுள்ளவர்கள் ஏனைய தமிழ் சமூகத்தினருடன் போட்டியிட முடியாமல் பின் தங்கி விட்டார்கள். இஸ்லாமிய மாணவர்கள் ஆசிரிய தொழிலுக்கு வரும்போது, அவர்களுக்குத்தங்கு தடையின்றி இடமும் கிடைத்து வந்தது.

இதன் முன் இஸ்லாமியர்கள் தங்கள் பிள்ளைகளை இஸ்லாமிய ஆசிரியர்களைக் கொண்டே பயிற்றுவிக்க வேண்டும் என்று கோரினார்கள். இஸ்லாமியரல்லாத ஏனைய தமிழ் மக்கள் இதை ஏற்றுக் கொண்டார்கள்; அதன் பின் இஸ்லாமிய பாடசாலைகளுக்கு இஸ்லாமிய ஆசிரியர்கள் அனுப்பப்பட்டனர். ஏனைய தமிழ் ஆசிரியர்கள், ஏனைய தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர், இஸ்லாமியர்களும் ஏனைய தமிழ் மாணவர்களும் கலவலாக உள்ள பாடசாலைகளில் அந்தந்தப் பிள்ளைகளின் விதாசார அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்!

இஸ்லாமிய மாணவரதும் ஏனைய தமிழ் மாணவர்களினதும் விகிதாசார அடிப்படையில் பயிற்சியளிப்பதற்கு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்று கல்வியமைச்சர் பாராளுமன்றத்திலே ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது கூறியிருக்கிறார்: இஸ்லாமிய ஆசிரியர்கள், இஸ்லாமியரல்லாத ஏனைய தமிழ் மாணவர்கள் பயிலும் பாடசாலைகளுக்கு அனுப்ப இதன் மூலம் அவர் பாதை சமைக்கிறார்! இதற்காகவேதான் அவர் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு ஏராளமான இஸ்லாமிய ஆசிரிய பயிற்சியாளர்களைக் கொண்டு சென்று நிரப்புகிறார். இவர்கள் எவ்வித எழுத்துப் பரீட்சையும் இன்றி, நேர்முகப் பரீட்சையுடன் மட்டும் அனுமதிக்கப்படுகிறார்கள்! ஒரு பரீட்சை வைத்தால் இவர்களில் பலருக்கு அங்கு இடம் கிடைக்காமற் போய்விடுமென்பது அமைச்சருக்குத் தெரியும்.

1971—72-ம் ஆண்டுப் பயிற்சிக்காக கடந்த ஆண்டு பலாலி பயிற்சிக் கலாசாலைக்கு 157 இஸ்லாமிய பயிற்சியாளர்களை அவர் அனுமதித்திருக்கிறார். ஆனால் அதே வேளையில் கடந்த ஆறுவருடமாக எழுத்துப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட இஸ்லாமிய மாணவர்கள் தொகை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 65—66 | பயிற்சிக்கு | 35 பேர் |
| 66—67 | ,, | 20 ,, |
| 67—68 | ,, | 27 ,, |
| 68—69 | ,, | 21 ,, |
| 69—70 | ,, | 17 ,, |
| 70—71 | ,, | 24 ,, |

இதைக் கூட்டும்போது வரும் தொகை 144. இது 1971 — 1972ம் ஆண்டுக்கு பயிற்சிக்கு அனுப்பப்பட்ட தொகையை விடக் குறைவானது.

அனுப்பப்பட்ட 157 பயிற்சியாளர்களில், 69 பேர் அட்சர கேத்திர கணிதலைகளில் விசேட பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் 37 பேர்களால் பயிற்சி வகுப்புக்களை பின்பற்ற முடியாமற் போய்விட்டது. அதனால் இவர்களுக்காக தரங் குறைந்த வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது!

1971—72ம் ஆண்டுக்கு முன், ஒரு தெரிவுப் பரீட்சையை நடாத்தி, அதன் பெறுபேறைக் கொண்டே அனுமதிகள் வழங்கப்பட்டன. 1971—72ல் நேர்முகப் பரீட்சையுடன் அனுமதி வழங்கப்பட்டது. எழுத்துப் பரீட்சை ஒன்றும் நடத்தப்பட்டதாயினும், அதன் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை; ஆனால் நேர்முகப் பரீட்சையின்படி, 157 பேர் அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பயிற்சியாளர்களில் சிலர் தேவையான அடிப்படை அறிவுகூட இல்லாதவர்கள் இதனால் இவர்கள் சில மாதங்களுக்கு விரிவுரைகளைக் கேட்ட பின்னர் அதைப் புரிந்து கொள்ள முடியாமல் ஓடிவிட விரும்புகிறார்கள்: ஆனால் அப்படிப்பட்டவர்களை பயிற்சி முடிவில் இறுதிப் பரீட்சை எதுவும் நடைபெறாது என்றும் தராதரப் பத்திரம் வழங்கப்படுமென்றும் கூறி தடுத்து வைத்திருக்கிறார்கள் — பலாலி பயிற்சிக் கலாசாலையிலுள்ள இஸ்லாமிய மன்றம் அமைச்சரிடம் சென்று இறுதிப் பரீட்சை எதுவும் நடத்த வேண்டாமென்றும், பயிற்சி முடிந்த பின் தராதரப்பத்திரம் வழங்கும்படியும் கோரியிருக்கிறது.

''1969—70ல் ஆங்கில விசேடப் பயிற்சியில், பயிற்சியளிக்கப்பட்ட 68 பேரில் 21 பேர் இறுதிப் பரீட்சையில் தோல்வியடைந்துவிட்டார்கள். இவர்கள், 1972ல் இறுதிப் பரீட்சை யேதுமில்லாததால் தங்கள் தராதரப் பத்திரங்களை தரும்படி அமைச்சரிடம் கோரியுள்ளனர். ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு முன் அடிப்படையான அறிவைப் பெறத் தவறியவர்களுக்கு எல்லாம் இது வாய்ப்பளிப்பதாக இருக்கும். தரங் குறைந்தவர்களை யெல்லாம் பயிற்சிக்கு அனுமதிக்கவே எழுத்துப் பரீட்சை கைவிடப்பட்டிருக்கிறதென்பது வெள்ளிடைமலை. இதன் பெறுபேறு, பயிற்சியாளர்களின் தரம் வீழ்ச்சியடைதலும் வெளியே அனுப்பப்படும் ஆசிரியர்களின் தரம் குறைதலும்தான்!

ஏராளமான இஸ்லாமிய பயிற்சியாளர்களை ஆசிரியர்களாகக்கொண்டு வருவதில் அமைச்சர் வெற்றியடைந்தால், அவர்களை, இஸ்லாமியர்களல்லாத ஏனைய தமிழ் சமூகத்தவரின் பாடசாலைகளில்தான் நுழைக்க வேண்டி யேற்படும். திறமைமிக்க ஆசிரியர்கள் பலர் இருக்கும் போது, தமிழ் பாடசாலைகளில் தரங்குறைந்த இஸ்லாமிய ஆசிரியர்களை எதற்காக நியமிக்க வேண்டும்?

அடுத்த தேர்தலைப் பற்றி நினைப்பவன் அரசியல் வாதி— அடுத்த தலைமுறையைப்பற்றி சிந்திப்பவனே அரசியல் ஞானி என்று கூறுவார்கள். அதே போல அடுத்த தேர்தலைப்பற்றி சிந்திக்கிறார்கள் முஸ்லிம் பா. உ. க்கள். ஆனால் தந்தை செல்வாவோ அடுத்த தலைமுறையினரின் அடிப்படைக்கல்வி பாழ் பட்டுப்போகக் கூடாதே யென்று கவலைப்படுகிறார்! இதில் என்ன இனவாதம் இருக்கிறதென்று எமக்குப் புரியவில்லை—

தரம் குறைந்த இஸ்லாமிய ஆசிரியர்களைப் பெருந் தொகையாக உருவாக்குகிறீர்களே— அவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்? தரமற்ற அவர்களைத் தமிழ்ப் பாடசாலைகளில் நியமிக்காதீர்கள் என்று தந்தை அவர்கள் கூறியிருக்கிறார்கள்!

தமிழ்பேசும் மக்கள் யாராக இருந்தாலும் சரி—தரா தர மற்ற ஆசிரியர்களை தங்கள் பாடசாலைகளில் நியமிப்பதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏன், இஸ்லாமியப் பாடசாலைகளில் [illegible] தராதரமற்ற பதியுதீன் பிராண்ட்'' ஆசிரி[illegible]கள் இஸ்லாமிய ஆசிரியர்களாக இருந்தாலும் கூட—இஸ்லாமிய மக்கள் அனுமதிப்பார்களா?

## குப்பிழானில் தமிழ் விழா!

• குப்பிழானில் தமிழ் விழாவொன்று டிசம்பர் 31, சனவரி 1 திகதிகளில் நடைபெறுகிறது. குப்பிழான் இளைஞர்களால் ஆண்டுதோறும் நடத்தப்படும் இவ்விழாவில் பல முக்கிய பிரமுகர்கள் சொற்பொழிவாற்ற இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

அன்பு நண்பா,

வங்கம் தீட்டிய புதிய விடுதலை வரலாறு கண்டு பூரித்துப்போயிருக்கும் உனக்கு, மலர்ந்துள்ள புத்தாண்டில் புதுப் பொலிவும் வலிவும் சீரும் சிறப்பும் செழித்திட வாழ்த்துகிறேன்.

செந்தமிழன்னையின் சிறையுடைத்து—நாட்டில் நமக்கோர் ஆட்சி கண்டு, அரியணையில் அன்னைத்தமிழை அமர்த்தி ஆள வைத்துப் பார்த்திடாமல், சீரென்ன, சிறப்பென்ன வேண்டியிருக்கிறது நமக்கு; நந்தமிழினத்தை மீளா அடிமைகளாக்கும் தனிச்சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசியலமைப்பன்றோ வரவிருக்கிறது மிக விரைவில்! இந்நிலையில் புத்தாண்டு எப்படி நமக்கு மகிழ்ச்சி தந்திட முடியும்: குதூகலம் அளித்திட முடியும்; என்று கேட்டிடுவாய்! புத்தாண்டு நம் உரிமைப் போராட்டத்துக்கு வழிவகுத்திடவிருக்கிறது; புத்தாண்டு போராட்ட ஆண்டாக அமைய விருக்கிறது; போர் முரசு எழுந்திடப் போகிறது வருகின்ற நமது இயக்க மாநாட்டிலே; முன் எப்பொழுதுமில்லாதவாறு கடுமையாக நாம் ஒவ்வொருவரும் இனத்தின் விடுதலைக்காக உழைத்திட வேண்டிய நேரம் இது; கண்ணீரும் வியர்வை சிந்தி, இன்னல் பலவற்றை இன் முகத்துடன் ஏற்றபடி, தமிழரசு இயக்கம் காட்ட விருக்கும் புதுப்பாதையிலே—விடுதலைப்பாதையிலே வீர நடை போட நம்மை நாமே தயாராக்கிட வேண்டிய காலம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது. அந்த மகிழ்ச்சியிலே—பூரிப்பிலே திளைத்திருக்கும் உன்னை வாழ்த்திட வேண்டாமோ!

உன்னை வாழ்த்திடும் அதே வேளையில், மாற்றார் நமது இயக்கத்தை—தமிழினத்தின் ஒற்றுமையை—பிளவு படுத்திட—சிதறடித்திட சதிகள் பல மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையும் உன் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன். அண்மைக்கால அரசியல் நிகழ்ச்சிகள் சிலவற்றை ஆழ்ந்து அலசிப் பார்க்கும்போது இந்த உண்மை விளங்குகிறது.

ஆம் நண்பா, தமிழினத்தை கறையான் போல அரித்து வந்த பிரதேசப் பிரிவினைக் கூச்சலை—வடக்கு, கிழக்கு என்கின்ற வாதமற்ற வாதத்தைக்கிளப்பி—தமிழரசுக்கட்சி கட்டியெழுப்பியுள்ள தமிழின ஒற்றுமைக்கோட்டையை—கோப்பாய்க்கோமானும், வரோதயரும், தந்தையாவும் மூதூர் ஏகாம்பரமும் இரும்பு மனிதர் நாகநாதனும் தங்கள் இரத்தத்தை சிந்தி—ஓடாக உழைத்து உயிரையே தந்து கட்டியெழுப்பிய தமிழின ஐக்கியத்தை—தகர்த்தெறிந்திட மாற்றார்கள் மீண்டும் தீவிர சதிகளில், சூழ்ச்சிகளில் இறங்கியுள்ளனர்! அதுவும் தமிழினத்தின் வரலாற்றில மிக அபாயகரமான கட்டத்தில்—நம்முடைய மாநில மாநாடு கூடி தீர்க்கமான முடிவு எடுக்க விருக்கும் இச்சந்தர்ப்பத்தில் கிழக்கு, வடக்கு என்ற பிரதேசக் கூச்சலை எழுப்பி—நமது இயக்கத்துக்குள் மோதலைத்தோற்றுவித்திட முடியுமா என்று மோப்பம் விடுகின்றனர் மாற்றார்.

நம்மையே அழிக்கத்துடிக்கிறவர்கள்—நமது இயக்கத்தை பூண்டோடு கிள்ளியெறிய சபதமெடுத்திருப்பவர்கள்—நம் தலைவர்களை அன்று பின்றுவென்று திட்டியவர்கள் எல்லாம் நம்முடைய கட்சித் தேர்தல் பற்றி அதீத அக்கறை காட்டி செய்திகள் வெளியிடுகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? சோழியன் குடுமி சும்மாவா ஆடும்?

ஆனால் நண்பா, மாற்றாரின் சூதாட்டத்துக்குப் பலியாகக் கூடியவர்கள்—கிழக்கு, வடக்கு, என்று பிரிவினை வாதத்துக்கு இரையாகக் கூடியவர்கள்—நம்மிலே யாருமில்லை என்பதை நாடறிந்திடும்! நம்முடைய தமிழரசு இயக்கத்திலே உள்ளவர்கள் யாராக இருந்தாலும்—அவர்களுக்கு மக்கள் மத்தியிலே இன்று பெயரும் புகழும் செல்வாக்கும் இருக்கிறதென்றால் அது அவர்களின் தனித்திறமையினால் ஏற்பட்டதல்ல; அவர்கள் விடுதலைப் பாசறையாம் தமிழரசுக்கட்சியில் இருக்கின்றனர் என்பதனால் தான் இந்நாட்டுத் தமிழர்கள் மட்டுமல்ல—வெளிநாட்டுத் தமிழர்களும் கூட பெருமை தந்திடுகின்றனர்!

நமது தமிழரசு இயக்கத்திலிருந்து—வெளியிலுள்ள இனத்துரோகிகளின் புத்திமதிகேட்டு—வெளியேறி பாதைதவறிச் சென்றவர்கள்; கட்சிக்கட்டுப்பாட்டை மீறியதற்காக வெளியேற்றப்பட்டவர்கள்—இன்று தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு செல்லாக்காசாக்கப்பட்டுவிட்டதை கடந்தகால அரசியல்வரலாறு நம் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கையாக எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது!

ஆம் நண்பா, அந்த அளவுக்கு தமிழ் மக்களிடம் தெளிந்த அரசியல் ஞானம் இருக்கிறது. நம்முடைய தந்தை செல்வா அவர்களே தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறினாலும் அவரைக் கூட ஒதுக்கித்தள்ள தமிழ் மக்கள் இன்று தயங்கமாட்டார்கள்! அந்த அளவுக்கு தமிழரசுக்கட்சி தமிழ் மக்களினது இதயங்களில் நிறைந்த பேரியக்கமாகி விட்டது!

எனவேதான் தமிழின ஒற்றுமையை சிதறடித்திடும் மாற்றாரின் சதித்திட்டம், தமிழரசுக்கட்சியினரிடத்திலும்சரி, தமிழ்மக்களிடமும் சரி இனிஒருபோதுமே பலித்திடப் போவதில்லை! தமிழினத்தின் எதிரிகளின் சூழ்ச்சிகளுக்கு தப்பித்தவறி யாராவது, பலியாக எண்ணினால் கூட விடுதலை வேட்கை கொண்ட தமிழினம் அப்படிப்பட்டவர்களை இலேசில் விட்டு வைக்காதென்பது நிச்சயம்!

**சோசலிசம் என்கின்ற போர்வையில் கடந்த ஒன்றரை ஆண்டுகால ஆட்சியில் தமிழினத்தின் உரிமைகள் பலவும் படிப்படியாகப் பறிக்கப்பட்டு—வரவிருக்கும் புதிய அரசியலமைப்புடன் தமிழினத்தின் குரல்வளை நெரிக்கப்படவிருக்கிறது!**

**சோசலிசம், சமதர்மம் என்ற போர்வையின் கீழ் ஆளுங்கட்சி தமிழினத்துக்கு**

## துரோகிகளே தூரவிலகுங்கள்!

**செய்யும் கேடுகளுக்கு எல்லாம் ஆமாம் சாமி போடும் எந்தத் தமிழனும்—எதிர்காலத்தில் போட விரும்பும் எந்தத் தமிழனும்—தமிழினத்தின் பச்சைத் துரோகி; ஐந்தாம்படை என்பதை தமிழ் மக்கள் தெளிவாக உணர்ந்து விட்டார்கள்! ஆளுங்கட்சியிடம் சரணடைந்து தமிழ் மக்களை இனியும் யாரும் ஏமாற்ற முடியாது:**

நண்பா. கடந்த ஒன்றரை ஆண்டு கால 'சோசலிச' ஆட்சியில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் காட்டப்பட்ட பாரபட்சங்கள் ஏராளம்; ஏராளம்; அவற்றில் சிலவற்றைக் கீழே தருகிறேன்—இன்னும் சோசலிச மயக்கில் சிக்கிட விரும்புவோர் யாராவது இருந்தால் அவர்களுக்கு இவற்றை நீ எடுத்துக் காட்டுவதற்காக!

O இந்நாட்டில் சிங்கள இனம், தமிழினம் என இரண்டு பெரிய இனங்கள் வாழுகின்றன. நாட்டின் பிரதமர் என்பவர் நாடு முழுவதற்கும் பொதுவானவர். இந்த உண்மையை மீறந்து — தேர்தல் முடிந்து பிரதமர் பதவியேற்றதும், முதன்முதல் பொது வைபவமொன்றில் பேசிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, 'சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பேன்; சிங்கள மக்கள் என் மீது வைத்த நம்பிக்கைக்கு துரோகமிழைக்கமாட்டேன்' என்று அறிவித்து, தமது இனவாத மனப்பான்மையை படம் பிடித்துக் காட்டிக்கொண்டார்.

O 'இந்நாட்டில் தமிழினம் என்றோர் இனமில்லை; அது ஒரு கலப்புச்சாதி' யென்று, ஐக்கிய முன்னணி அரசின் தபாலமைச்சரான திரு. செல்லையா குமாரசூரியர் கூறி, தமிழ் இனத்தின் தன்மானத்துக்கு சவால்விட்டுத் தமிழ் இளைஞர்களை கொதித்தெழ வைத்தார்.

O வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள், இந்நாட்டுக்கு படையெடுத்து வந்தவர்களின் பரம்பரையினர்; வந்தேறுகுடிகள்; அவர்களுக்கு எந்தச் சலுகையும் தருவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை' என்று மூதவையில் பச்சை இன வெறியைக் கொட்டினார் சிங்கள நீதியமைச்சர்!

O இந்நாட்டுத் தமிழினத்தாருக்கும் தமிழ் நாட்டாருக்குமிடையே தொன்று தொட்டு இருந்துவரும் மொழி இலக்கிய, கலாசார உறவுகளைத் துண்டித்து, ஈழத்தமிழினத்தைத் தனிமைப்படுத்தி அழித்து விடும் சதி முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது!

O உலகத் தமிழ் மக்களின் வழிகாட்டியாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின்

O வடபகுதியில் கள்ளக் கடத்தல் தடுப்பு, கள்ளக் குடியேற்ற தடுப்பு — என்ற போர்வையில் இராணுவத்தினர் பொதுமக்களை மிலேச்சத்தனமாக தாக்குவதாகவும், இராணுவத்தினரை வாபஸ் பெற்று போலிசாரிடம் அப்பொறுப்பை கையளிப்பதன் மூலம் இராணுவக் கொடுமையிலிருந்து தமிழ் பொது மக்களைக் காப்பாற்ற வேண்டுமெனவும் தமிழ் பா. உ. க்கள் விடுத்த கோரிக்கை அப்படியே புறக்கணிக்கப்பட்டது.

O 'தரப்படுத்தல்' என்ற போர்வையின் கீழ் தகுதியும் திறமையும் படைத்த பல தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக உயர் கல்வி பெற முடியாமல் தடுக்கப்பட்டார்கள். கல்வி வழங்குவதிலும், தமிழர், சிங்களவர் என்று இன, மொழி அடிப்படையில் பச்சை வகுப்புவாதம் பின்பற்றப்பட்டது. இந்த அநீதியை எதிர்த்து தமிழ் பிரதேசம் எங்கும் தமிழ் மாணவர்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பல்கலைக்கழக பொறியியல் துறைக்கு பேராதனைக்கு தெரிவுசெய்யப்பட்ட 117 தமிழரில் 56 பேரே அனுமதிக்கப்பட்டனர்; கட்டுபெத்தையிலுள்ள தொழிற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட 80 தமிழரில் 44 பேரே அனுமதிக்கப்பட்டனர்; திறமை அடிப்படையில் 200 தமிழர் தெரியப்படவேண்டிய இடத்தில் 100 பேரே தெரிவுசெய்யப்பட்டனர். தரப்படுத்தல் எப்படி நடைபெற்றது தெரியுமா?

| அட்டவணை | சிங்கள மாணவர்கள் பெறவேண்டிய புள்ளி | தமிழ் மாணவர்கள் பெறவேண்டிய புள்ளி | தமிழ் மாணவர்கள் கூடப்பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|
| 1. பேராதனைப் பல்கலைக் கழகம் பொறியியல் | 227 | 250 | 23 |
| 2. கட்டுபெத்தை பொறியியல் | 212 | 232 | 21 |
| 3. பௌதிக விஞ்ஞானம் | 183 | 204 | 21 |
| 4. கட்டடக் கலை | 180 | 194 | 14 |
| 5. மருத்துவம், பல், மருத்துவ | 229 | 250 | 21 |
| 6. கமத்தொழில் மிருக மருத்துவம் உயிரியல் விஞ்ஞானம் | 175 | 184 | 9 |

## வடக்கு கிழக்குப் பிரிவினைவாதம் தமிழனிடம் இனி விலைபோகாது!

கல்வியமைச்சின் பாரபட்சமான நடவடிக்கைகளினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழ் பாடசாலைகள் பல மூடப்பட்டுள்ளன; தமிழ்ப் பாடசாலைகளுக்கு தகுதி குறைந்த— தரமற்ற ஆசிரியர்கள்— அனுப்பப்படுகிறார்கள். இதன்மூலம் தமிழ் மாணவர்களின் கல்வித்தரத்தை வேரறுத்து வருகிறது கல்வியமைச்சு! இஸ்லாமியரல்லாத தமிழ் மாணவர்கள் அதிகமாகப் பயிலும் பாடசாலைகளுக்கு, இஸ்லாமிய ஆசிரியர்களை பெருந்தொகையாக அனுப்பி, தமிழ் பேசும் மக்களிடையே பிளவை மூட்டிவிட சூழ்ச்சிகள் பல கையாளப்படுகின்றன.

தமிழ் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் பரிசளிப்பு

## இயக்கத்துக்குள் குழப்பம் மூட்டிட முயலும் மாற்றாரின் எண்ணத்தில் மண் போடுவோம்!

இறுதியாத்திரை திரைப்படத்துக்கு தடை; பாரதியின் 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' பாடலுக்கு வானொலியில் தடை; தமிழ் நாட்டு இலக்கிய ஏடுகள், தி. மு. கழக ஏடுகள் மற்றும் புதினப் பத்திரிகைகள் இறக்குமதிக்குத் தடை; தமிழ்த் திரைப்படங்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடு; தமிழகத்துக் கலைஞர்கள் ஈழம் வரத் தடை; இப்படி தமிழ் கலாசார வளர்ச்சிக்கு தடைபோடும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது!

O தமிழ் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் முற்றாக கைவிடப்பட்டன; குறிப்பாக முந்திய அரசால் தொடங்கப்பட்ட காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகள் அப்படியே நிறுத்தப்பட்டன.

விழாக்கள் மற்றும் கல்வித்துறையுடன் சம்பந்தப்பட்ட விழாக்களுக்கான அழைப்பிதழ்கள் தனிச் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே கல்வியமைச்சால் வெளியிடப்படுகின்றன; நூற்றுக்குநூறு தமிழ் மன்னான மட்டக்களப்பு மாவட்ட மாவித்தியாலயங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அழைப்பிதழிலும், சிலாபம் சென்ற் மேரீஸ் கொன்வென்ட் அழைப்பிதழிலும் ஆங்கிலமும் சிங்களமும் இடம் பிடித்துக் கொண்டதையும், தமிழ் முற்றாக புறக்கணிக்கப்பட்டதையும் ஏற்க

[10ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதில் பெரும் முட்டுக்கட்டைகள்

ஆறு வயதைப் பூர்த்தியானோர் பாடசாலைகளில் சேர்வதில் பல சிரமங்களை அடைகின்றனர். பிற்போக்கான பகுதிகளில் வாழும் பெற்ருர் இன்னமும் விண்ணப்பங்களைக்கூட பாடசாலைகளுக்கு அனுப்பவில்லை. பத்து மாணவர்களுக்குக் குறைவாக ஆரம்பபாடசாலையில் சேர்த்தால் அவர்களுக்குத் தனிவகுப்புக்கள் நடாத்த வேண்டாமென நுவரெலியா மாவட்ட கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. மலையகத்தில் மிகக் குறைவான மாணவர்களே ஆறுவயதைப் பூர்த்தி செய்தோர் இருக்கிருர்கள். இவர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் ஐந்து, ஆறு பேராகவே இருக்கின்றனர். இவர்களின் படிப்பு அதோ கதியாகத் தானிருக்கிறது.

ஆரம்ப பாடசாலையில் மாணவர்களைச் சேர்ப்பதாலும் புதிய கட்டடங்களைக் கட்டி அதிலேயே வகுப்புக்கள் நடாத்தவேண்டும். புதிதாகச் சேரவரும் மாணவர்களிடம் கட்டட நிதியும் கேட்கப்படுகிறது. ஒரு பிரபல மலையகக் கல்லூரியில் பிள்ளைகளைச் சேர்க்க நான் சில மாணவர்களை அழைத்துச் சென்றபோது அவர்களிடம் கல்லூரி உதவி அதிபர் என் முன்னிலையிலேயே பணம் கேட்டார். புதிய ஆண்டு மாணவர்களைச் சேர்க்கும் பொழுது முதலாளிகளின் பிள்ளைகளிடம் நூறு ரூபாவும், நடுத்தர உத்தியோகஸ்தர்களிடம் ஐம்பது ரூபாவும் தோட்டப் பிள்ளைகளிடம் இருபத்தைந்து ரூபாவும் பெற்றுக்கொள்ள முடிவு செய்திருப்பதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. மலையகப் பிள்ளைகளின் கல்வியில் அப்பகுதிப் பாடசாலைத் தலைவர்களே பலவித நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளார்கள் இதனுல் அவர்கள் கல்வி அடுத்தாண்டு பெரிதும் பாதிக்கப்பட இருக்கின்றது.

—'புத்தொளி'

## மலையகத்திலே........

# ஆலயங்களில் அர்ச்சனை செய்வதிலும் பாகுபாடா?

ஆன்மாக்கள் தமது மனதை ஒடுக்கி, ஒரு நிலைப்படுத்தி, தூய உள்ளத்துடன் இறைவனை தம் இதயக் கமலத்துள் இருத்துவதற்கு பிரசித்திபெற்ற - அமைதியான இடமே ஆலயமாகும். ஆலயம் என்ற சொல்லைப் பிரித்து அதன் பொருளை நுகர்வோமானுல் (ஆ+லயம்) ஆன்மாக்கள் தம் மனதை ஒடுக்கி ஒரு நிலைப்படுத்துமிடமெனப் பொருள்படும்.

இப்படிப்பட்ட புனிதமான இடத்திற்கு நுழைபவர்களும் புனிதமான உடம்போடு மட்டும் செல்லாமல்—புனிதமான உள்ளத்துடனும் செலுதலே பண்டுதொட்டு இன்றுவரை பழக்கத்தில் இருந்து வரும் பாரம்பரிய பழக்கமாகும். இந்தப் புனித என்ற சொல் எத்துணைப் புனிதமானது என்பதை இன்றைய சில அந்தணர்களும், குருக்கள்மாரும் அறிந்து கொள்ளாமலும், புரிந்து கொள்ளாமலும் எத்தனை அநியாயமான, அவலமான செயல்களை, செய்து வருகிருர்கள். இதற்குக் காரணம் ஆலயத்தில் அரசாட்சி செய்யும் அந்தணர்களா? அல்லது ஆண்டவனது அடிமையாகிய அடியவர்களா? நாம் சற்று சிந்திக்கவேண்டும்;

ஆம் இன்று தமிழகத்தில் தமிழில் அர்ச்சனை செய்து வரும் இந்த இருபதாம் நூற்ருண்டிலும் மலையகத்தில் உழைப்பாளரின் உறைவிடத்தில்—பணக்காரனின் பணிவிடத்தில் பாகுபாடு காட்டப்படுகிறது என்பதை கூறுவதற்கே நா கூசுகிறது.

ஆம் அர்ச்சனை தட்டுடன் ஆலயத்ினுள் சென்ருல் அங்குள்ள பூசாரி 'ஆளைப் பார்த்து, அவன் தோளைப் பார்த்து, அவன் காலைப் பார்த்து (காலிலும் நகைகள் அணிந்திருக்கிருனு?), அணியைப் பார்த்து அளவிடுகின்ருன்.

எப்படி? இவன் நம்மலூர் பறையன்! இவன் இழிந்த சாதி!! இவன் நம்மிலும் கீழ்ப்பட்டவன்!! இவன் தட்டையா முதலில் வாங்குவது? என்று தட்டையே தள்ளிவிடுகின்றனர்; என்னே சாதி வெறி!

இந்த ஜாதி—வெறிபிடித்துள்ள இடம் கம்பளை மாரியம்மன் கோவில், நான் வெள்ளிக்கிழமை நாட்களிலும், விசேட நாட்களிலும் கோவிலுக்கு செல்வது வழக்கம். இப்படி போகும் சமயத்திலே சாதி—வெறி ஆரம்பித்துள்ளதை எனது கண்ணால் கண்ணுற்றேன். என் மனதினுள் அடக்கி வைக்க முடியாத இவ்விடயத்தை 'சுதந்திரனுக்கென்றே சுதந்திரமாக தருகிறேன்.

இறுதியாக ஏழை—பணக்காரன், உயர்வு—தாழ்வு, ஜாதி—மதம், குலம்—குணம்; என்ற பிரிவுகளை நீக்கி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உண்மை வாக்கிற்கொப்ப 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு-நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு' என்ற வாய்மையை மனத்திற் கொண்டு ஆலயங்களை புனிதமாக வைத்திருக்க வேண்டியது குருக்களின் கடமைமட்டுமல்ல—அடியவர்களின் (பக்தர்களின்) பொறுப்புமாகும்.

—கினிகத்தேனை ஜெயம்

## 380 பேர் கழகத்தில் சேர்ந்தனர்!

தலவாக்கொல்லை இராயந்துரை தோட்டத் தொழிலாளர்கள் 380 பேர் ஜனுப் அஸீஸின் ஜ. தொ. கா. விலிருந்து விலகி தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கை தொழிலாளர் கழகத்தில் அண்மையில் சேர்ந்துள்ளனர்;

இத்தொழிலாளர்களின் தொழில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கழகம் தீவிர நடவடிக்கையெடுத்து வருகிறது.

# வெள்ளப் பெருக்கு வட்டக்கச்சியில்! அன்று 'பாண்' கொடுத்தவர் இன்று எங்கே?

வட்டக்கச்சியில் சென்ற பதினைந்து தினங்களாக பெய்த மழையின் காரணமாக பன்னங்கண்டி என்று சொல்லப்படுகிற (பாலத்தை) தெரு, டிசம்பர் 15ம் திகதி இரவுடன் போக்குவரத்து வசதிகள் ஏதும் இல்லாமல் தடைப்பட்டுவிட்டது. இதனுல் மக்கள் படும் கஷ்டமோ சொல்லில் அடங்கா.

கதம்பநிகழ்ச்சிகளுக்கும்—விளையாட்டுப் போட்டிகளுக்கும்—திறப்பு விழாக்களுக்கும் முன்னணியில் நின்று கொக்கரிப்பவரும் தேர்தல் காலங்களில் கூறியவற்றை எல்லாம் மறந்து, மக்கள் மத்தியில் செல்லாக்காசாக உலவிவரும் கிளிநொச்சித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆனந்தசங்கரி எங்கே என்பதை யாராலும் அறியமுடியவில்லை.

தேர்தலுக்குமுன் பாலம் உடைந்தபோது (1969 டிசம்பரில் கா. பொ. இரத்தினம் நா. உ. இருந்தபொழுது) அக்கரையில் நின்று பாண் கொடுத்தவர், இம்முறை எங்கு சென்ருர்? வட்டக்கச்சி மக்களே இப்போதாவது உணர்வீர்களா நீங்கள்விட்ட தவறை?

தேர்தல் காலங்களில் மட்டும் தம்பட்டம் அடிப்பவர்கள்—எம்.பியாக வரத்துடித்தவர்கள்—கடந்த இரண்டு வருட காலமும் எங்கிருந்தார்கள். 1969ம் ஆண்டு உடைத்த இந்தப் பாலம் இதுவரை காலமும் பூர்த்தி செய்யமுடியவில்லை யானுல் ஏன் ஐயா! இருக்கின்றீர்கள்?

12.12.71ல் வட்டக்கச்சிக்கு வந்தபொழுது கூறினீர்களே! மூன்று வருடம் மட்டும் கஷ்டப்படுவோம். (மூன்று வருடக் காசையும் சேர்த்து பெரிய பாலம் அமைப்போம்) அதன்பின்னர், பெரிய பாலமாக அமைப்போம் என்றீரே. வட்டக்கச்சி, இராமநாதபுரம் மக்கள் கஷ்டப்படுவதை உமது சகாக்கள் மூலம் கேட்டு இரசிக்கவா போகிறீர். ஏனய்யா உமக்கு இந்த வேலை. பேசாமல் ஆசிரியர் தொழிலைப் போய் பாரும். அதற்கும் நீர் இப்பொழுது இலாயக்கில்லாதவராகி விட்டீர்!

வட்டக்கச்சி விசேட விவசாயப் பாடசாலை அதிபர்களும் விவசாயப் பாடசாலை மாணவர்களும் சேர்ந்து ஆற்றிய தொண்டிற்கு வட்டக்கச்சி இராமநாதபுரம் மக்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாவார்கள். இவர்களை என்றும் வட்டக்கச்சி மக்கள் மறக்கமாட்டார்கள்; நீர் ஆற்றமுடியாததை இவர்கள் செய்துவிட்டனர்!

சென்ற 12.12.71ல் நடந்த விழாவில் பங்குபற்றி கூறினீரே, ஆசிரியர் தொழில் சிறந்தது— ஆனுல் 'சுதந்திரன்' ஆசிரியரைப் போல் இருக்கக்கூடாது என்றீரே. உமக்கென்ன சுதந்திரன் ஆசிரியருக்கு அவ்வளவுபயமா? அல்லது அவர் உமது செயல்களையும்-திருகுதாளங்களையும்-மக்கள் மத்தியில் நீர் விடும் தவறுகளையும் சுட்டிக் காட்டுவது தவறு...?

சுதந்திரன் எதை எழுதினுலும் தவறு—தமிழரசுக்கட்சி எதைச் சொன்னுலும் அது தவறு. ஆனுல் ஆளும்கட்சி, தமிழன் தலையில் ஏறிநின்று கூத்தாடினுலும் அது தவருக உமக்குத் தோன்றமாட்டாது. ஏன் என்ருல் அவர்களது குற்றேவல் செய்யும் எடுபிடி அடிமையல்லவா?

தமிழ் மக்களுக்கு கொள்ளிகுடம் உடைப்பதையும்—தமிழைக் கொலைசெய்வதையும்—தமிழ் மக்களைப் புறக்கணிப்பதையும் ஏற்பீர்—ஆனுல் சுதந்திரன் எதைக் கூறினுலும் அது தவருகவே உமக்குப்படுகிறது. இல்லாததையா—நீர் செய்யாததையா சுதந்திரன் எழுதுகிருன்.

இவற்றையும் சுதந்திரன் வாயிலாக நான் எழுதினுல் வீண் பழி சுதந்திரனுக்கே. ஆகையால் கிளிநொச்சியில் நடைபெறும் மகாநாட்டில் உமக்கு நேரடியாகவே பதில் தரக் காத்திருக்கிறேன்.

கிளிநொச்சி மக்கள் இப்பொழுதுதான் தாங்கள் விட்ட தவறுக்கு இரத்தக் கண்ணீர் வடிக்கிருர்கள்.

—வட்டக்கச்சியூர் எம்.என்.

# உத்தியோகப்பற்றற்ற எம்.பி.யாரின் தில்லுமுல்லுகள்!

பல எம். பி. மார் சுதந்திரனில் தோற்றிவிட்டார்கள் மன்னுர் எம். பி. யைக் காணவில்லையே என்று கவலையுடன் பார்த்திருந்தோம் அவர் புதைபொருள் ஆராச்சியில் ஈடுபட்டு வேருேர் ரகப் புதையலுடன் சுரங்கத்திலிருந்து வெளிவந்தவர் போல 12-12-71 சுதந்திரனில் ஆளுங்கட்சி அடிவருடிகளின் முக மூடியைக் கிழித்துக் கொண்டு வயோதிப விலையிலும் வாலிப வீரன்போல் கோதாவில் தோன்றிய காட்சியும் ஓர் அலாதிதான்;

எத்தனையோ வீரர்களைக் கோதாவில் தூக்கி எறிந்து விட்டுத் தொடை தட்டுகிருர்.

தோன்றிற் புகழொடு தோன்றுக, உத்தியோகப் பற்றற்ற எம். பி. அவ்வளவோடு மட்டும் நிற்கவில்லை.

மன்னுர் கூட்டுறவு பண்டகசாலைகளின் யூனியனிலும் தனக்குத் தலைவர் பதவியும் தன் சிடருக்கு நிர்வாக உறுப்பினர் பதவியும் தேடிக்கொண்டார். யூனியனில் பதவி வகிக்கும் ஒருவர் வீட்டில் தலைவருக்குப் பரிமளப் பான விருந்தும் நடந்து விட்டது. பதவிகளும் கண்பொத்தி விளையாட்டில் நடந்ததைக் கண்ட மக்கள் இதுதானு மக்கள் அரசாங்கம் என்று கூறிக்கொள்கிருர்கள்.

மன்னுர் கூட்டுறவு பலநோக்குச் சங்க யூனியன் நிர்வாக சபைக்கு நாலு உறுப்பினரைச் சேர்க்க வேண்டி இருந்ததால் கூட்டுறவு உதவி ஆணையாளர் அதன் கிளைகளாகிய மன்னுர் பண்டகசாலையிலிருந்து இருவரும், பள்ளி முனைப்பண்டகசாலையிலும், பேசாலைப் பண்டகசாலையிலும் ஒவ்வொருவராக அனுபவசாலிகளான நால்வரை மேலிடத்தின் அங்கீகாரத்துக்கு அனுப்பி இருந்தார்.

சென்ற ஐப்பசி மாதத்தில் அந்த நால்வரில் ஒருவரை மட்டும் ஏற்றுக்கொண்டு மேற்படி சங்கங்களில் அங்கத்துவ பதவியே இல்லாதவரும் இது பற்றிய அனுபவமே இல்லாதவருமான உத்தியோகப் பற்றற்ற (நீலநிற) எம். பி. தலைவராகவும் அவருக்கு தேர்தல் காலச் சிடராக இருந்த இன்னெருவரும் மேலிடத்தால் நியமிக்கப்பட்டு வந்ததையும் கண்ட மக்கள் அதிசயமடைந்தனர்.

—மன்னுர்த்தபால்—

பள்ளிமுனைக்கிளைச் சங்கத்திலிருந்து எவரையுமே சேர்த்துக் கொள்ளவில்லை.

இன்னேர் வேடிக்கை என்னவென்ருல் மன்னுரின் 7 வட்டாரங்களுக்கும் மக்கள் கமிட்டி நியமிக்கப்பட்டிருப்பதற்கு அங்கத்தவர்களை அனுப்பவேண்டிய வேளையில் மன்னுர் எம். பி. யும் உத்தியோகப் பற்றற்ற எம். பி. என்போரும் தத்தமக்கு இட்டமான தலைவர்களையும் அங்கத்தவர்களையும் எழுதி அனுப்பியதில்லை அங்கத்தினர்களை இருபகுதியிலும் கலந்து எடுத்தபோதும் தலைவர்களை மன்னுர் எம். பி. யின் சிபார்சுப்படி நியமித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் காட்டின. (உத்தியோகப்பத்திரம் அனுப்பப்படவில்லை) எல்லோரும் பிரதிமைப்படங்களும் எடுத்துவிட்டனர்

ஆனுல் 1ம் வட்டாரத்துக்குத் தலைவராகக் குறிப்பிடப்பட்டிருப்பவர் வந்தால் வரட்டும் வராவிட்டால் போகட்டும் என்று தன்பாட்டிலிருக்க -உத்தியோகப் பற்றற்ற எம். பி. க்கு வால் பிடித்துக்கால் பிடித்து ஸ்ரீலங்காக் கிளையைப் பள்ளி முனையில் உண்டாக்கித் தருகிறேனென்று தலைமைப் பதவிக்கு "இல்வு காத்த கிளிபோல்" திரிந்தவர் மக்கள் மத்தியில் மறைமுகமாக ஏதேதோ பேசிக்கொண்டு எதிர்ப்புப் "பிட்டிசன்" எழுதும் முயற்சியில் அலாய்ப் பறக்கிருர் அவர் நாமம் வாழ்க.

—மன்னுர்வாசி;

## இப்படியும் சொன்னுர்கள்!

"வல்வெட்டித் துறை கள்ளக்கடத்தல் நடைபெறும் இடம். அங்கே நாம் மிகுந்த ஆராய்வின் பின்னர்தான் உல்லாசப் பிரயாணிகளைக் கொண்டுசெல்வது பற்றி நடவடிக்கையெடுக்கவேண்டும். இல்லையேல் நாம் பாதிக்கப் படநேரிடும். வல்வெட்டித்துறை என்ருல் கள்ளக் குடியேற்றத்துக்கு பெயர் பெற்ற இடம் என்பது யாவரும் அறிந்ததே:

—கப்பல் உல்லாசப்பயணத் துறை உதவி அமைச்சர் திரு. டி. பி. விக்கிரமசிங்க.

"நாடு விட்டு நாடு செல்வது மனிதனின் ஜீவாதார உரிமை. அதற்கு தடைவிதிப்பது அநீதி. இத்தகைய தடை முன்பே இருந்திருந்தால் வங்காளதேசத்திலிருந்து விஜயன் வந்திருக்கமாட்டான்; நாமும் பிறந்திருக்கமாட்டோம்; பிரதமரும் இருந்திருக்கமாட்டார்.

—பாஸ்போட் சட்ட விதிகள் வெளியேற்ற மசோதா மீது பேசுகையில் நாடாளுமன்றத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தன [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியை கவிஞர் என்று அழைக்கலாமா?

ஒரு கவிஞனுக்குத் தேவைப்படுவது பல. அதில் ஒன்று உணர்ச்சி. நல்ல உணர்ச்சி வருமானால் கவிதை வரும். நான் உணர்ச்சியிலே குறைந்தவன் அல்ல. ஆனால் எனக்குக் கவிதை வரமாட்டேன் என்கிறது.

உணர்ச்சி மட்டுமல்ல; கவிஞனுக்குக் கற்பனையும் வேண்டும். கற்பனை நாவலாசிரியர்கள் — கற்பனையை வைத்துத்தான் எழுதுகிறார்கள். சிறுகதை ஆசிரியர்கள் கற்பித்துத்தான் எழுதுகிறார்கள்.

ஆனால், கதாசிரியர், நாவலாசிரியர் எல்லாம் கவிஞனாகிவிடுவதில்லை.

இதற்கு அப்புறமும் என்ன தேவைப்படுகிறது. வருணனைகள் தேவை. ஏன்? தேர்தல் காலத்தில் நமக்கு வருகிற வருணனை இருக்கிறதே-வறுமையைப் பற்றி நாட்டைப் பற்றி - வாக்காளர்களைப் பற்றி வருகிற வருணனையைப் பார்க்கும் போது தேர்தல்முடிவதற்குள் நாமும் கவிஞனாகி விடுவோமோ என்று தோன்றுகிறது. அதனால் கவிஞனாகி விட முடியாது ஆக—

இலக்கண அமைதியோடு பல பாடல்களைப் படைத்து கொடுத்தால்கூட அவருக்கு மன அமைதி இல்லாமலோ என்னவோ வசன கவிதையிலே பல பாடுகிறார். இலக்கண அமைதியோடு பாடிய பாடல்களிலுள்ள வருணனைத் திறன், இலக்கண அமைதியோடு பாடிய பொருட் செறிவு இந்த வசன நடையில் குறைந்துபோய் விடவில்லை.

ஆக - இலக்கண அமைதியோடு பாடத் தெரிந்த அவரும், வசன நடைக்கு வருவார் என்றால், அப்போது யாருக்கோ அது தேவைப்படுகிறது படைக்கிறார்!

இலக்கண அமைதியோடு பாடுகிற அந்தக் கவிதையை விட வசன நடையோடு பாடுகிற கவிதைகள் யாருக்கோ தேவைப்படுகிறது. அவர்கள் இலக்கண நயம் தெரிந்து கொண்டு, அவர்கள் இலக்கணப் புலமை பெற்றுக் கொண்டு அவர்கள் கவிதையுள்ளத்தைக் காண்பதற்கு இந்த எட்டடிக் குச்சுக்குள் கஷ்டப்பட்டுத்தான் உள்ளே வரவேண்டும் என்று படைப்பதை விட, அவன் இருக்கிற இடத்துக்குத் தான் போய் விசயத்தைச் சொல்ல வசன கவிதை அந்த மகா கவிக்குத் தேவைப்பட்டது.

இன்றைக்கு — கலைஞர் தலைமையிலுள்ள தி. மு. கழகம் சாமானிய மக்கள்தான் எங்கள் சமுதாயம் என்று அடித்துச் சொல்லி உறுதியாக அந்த அரசியல் கொள்கையாக்கிக் கொண்டிருக்கிறது. எவனெல்லாம் கண் மூடிக் கிடந்தானோ எவன் கண்களையெல்லாம் மூட வைத்ததோ—அந்த மூட வைத்த கண்கள் திறக்கப்பட வேண்டும்; திறக்கப்படுவதற்கு நாங்கள் பாடுபடுவோம்—என்று சொல்லும் கலைஞருக்கு—அந்தச் சாமானியர்களுக்குக் கொண்டு போய்க் கொடுக்க இது தேவைப்படுகிறது.

சாமானியர்களிடம் விசயத்தைக்கொண்டு செல்லும் போது அந்தச் சாமானியர்கள் விளங்குகிற—புரிகிற பாணியில் அவர்களுக்குக் கொண்டு செல்லப்படவேண்டும். அதில் மிகச் சிறப்பாக அவர் கவிதை நயம் தெரிகிறது.



உணர்ச்சி வேண்டும்; அந்த உணர்ச்சிக்கு ஒரு இலக்கணம் உண்டு. ஒருவனுக்கு வருகிற உணர்ச்சி, அவன் துன்பப்படுகிறபோது ஏற்படுகிற உணர்ச்சி இருக்கிறதே, அது அவனைக் கவிஞனாக்காது. பிறர் துன்பம் கண்டு எவன் உணர்ச்சிப் படுகிறானோ, அவன் கவிஞனாவதற்குத் தகுதியுடையவன்.

தனக்காகக் கண்ணீர் வடிப்பவன் கவிஞனாகிவிடுவதில்லை; பிறருடைய இன்னல் கண்டு கண்ணீர் விடுபவன் கவிஞனாவதற்கு ஒரு இலக்கணம் பெறுகிறான். தனக்குப் பிறர் தீமை இழைத்தபோது ஆத்திரப்படுபவன் கவிஞன் ஆவதில்லை.

வலியவன் எளியவனுக்குத் தீமை இழைக்கிறபோது அதைக் கண்டு ஆத்திரப்படுபவன் கவிஞனாகிறான். இப்படிப் பல இலக்கணங்கள் நம்முடைய கவிஞரிடம்—கலைஞரிடம் குவிந்திருப்பதால், அவர் கவிஞராக வளர்வதற்குத் தொடங்க முடிகிறது.

மகாகவி பாரதியார் இலக்கண அமைதியோடு பல நூறு பாடல்களைப் படைத்தும்கூட, வசனக் கவிதையிலே அவர் ஏராளமான பாடல்களைக் கொடுக்கிறார்.

இதை ஆழ்ந்து பார்க்க வேண்டும்.

கம்பனைப் பற்றி நான் ஒன்று இரண்டு மணி நேரம் பேச முடியும். எப்படி பாத்திரப் படைப்பு கொடுக்கிறான் சொல்லுக்குச் சொல் எப்படிச் சுவையேறுகிறது. கற்பனை எவ்வளவு அழகாகக் கற்பிக்கிறான்? உவமை நயம் எவ்வளவு சிறப்பாக இருக்கிறது?

இளங்கோவோடு கம்பனை, பாரதியோடு கம்பனை, வில்லியோடு கம்பனை ஒப்பிட்டு எடுத்துச் சொல்ல முடியும். அவ்வளவு திறமாகக் கவியுள்ளத்தைத் தெரிந்துகொண்ட நான், என்னுள்ளத்தைக் கவியுள்ளமாக்கிக் கொள்ள முடியவில்லை. ஏன்? அதற்கு வேறு ஏதோ தேவைப்படுகிறது. அதன் பெயர் எனக்குத் தெரியவில்லை.

அது கருணாநிதியாக என் எதிரே வந்து நின்று காட்டுகிறது என்று தான் நான் சொல்ல முடியும்.

('கருணாநிதி கவிதைகள்' வெளியீட்டு விழாவில் ம. பொ. சி. பேசியது.)




குமார்
கொழும்பு-12

கே: தமிழரசுக்கட்சியை அழித்தொழிக்கப்போவதாக சபதமெடுத்து, தமிழரசுக் கட்சித் தலைவர்களையும், தந்தைசெல்வாவையும் கேவலமாக திட்டி வரும் தினபதி சிவநாயகத்துக்கு தமிழரசுக் கட்சித் தலைவர் தேர்தலில் ஏன் இவ்வளவு அக்கறை?

ப: சோழியன் குடுமி சும்மா ஆடுமா? கட்சிக்குள் ஆளுக்கு ஆள் சண்டை மூட்டி விட்டு கட்சியை அழித்து விடலாமென்ற நப்பாசை தான் இதற்கு காரணம்!

கே: இராசதுரையைப் பற்றி தினபதியார் இடையிடை[?]ரென்று புகழ ஆரம்பித்திருக்கிறாரே...!

ப: இதே தினபதியார் தான் சில வாரங்களுக்கு முன் இராசதுரைக்கு சொற்பஞ்சம் ஏற்பட்டு விட்டதென்று எழுதி இராசதுரையை அவமதித்தவர். தினபதிப்பத்திரிகை முழுக்க முழுக்க ஒரு பொய்ப் பத்திரிகையென்று திரு. இராசதுரையே என்னிடம் பல தடவைகள் கூறியிருக்கிறார். எனவே தினபதியார் ஊட்டும் நஞ்சு இராசதுரையிடம் இஞ்சிறறும் ஏறாது என்பது எனது கருத்து!

க. ஜெயன்,
மாதகல்.

கே: தமிழனுக்கென்று தனி மொழி, பிரதேசங்களை, கலாசாரம் இருக்கும்போது அவனுக்கென்று ஒரு அரசமைப்பை ஏற்படுத்தினால் என்ன?

ப: அதற்காகத்தானே இலங்கைத் தமிழரசுக்கட்சி போராடி வருகிறது?

ஃ

எஸ். ஜெயராசா,
இறுப்பிட்டி,
புங்குடுதீவு.

கே: தமிழனுடைய பிரதேசம் எது என்று கேட்பவர்களை என்ன செய்ய வேண்டும்?

ப: தமிழ் பிரதேசத்திலிருந்து நாடுகடத்த வேண்டும்!

கே: சுதந்திரன் தரங்கெட்ட பத்திரிகையென்று கூறுகிறாரே சங்கரியார். அது பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: சுதந்திரனுடைய தரத்தைப்பற்றி அபிப்பிராயம் கூற சங்கரிக்கு என்ன தரம் இருக்கிறது?

ஃ

சோ. தவலிங்கம்,
கேணியடி ஒழுங்கை'
கொக்குவில்.

கே: குயுக்தியாரே பாதுகைத் திருடனின் பழைய கதைகள் எல்லாம் மட்டுநகர் எழுத்தாளர் ஒருவரின் சொந்தக் கற்பனையே என்கிறாள் என் மனைவி இது உண்மையா?

ப: உங்கள் மனைவிக்கு 'முற்போக்கு' வட்டத்தின் அடி அத்திவாரமெல்லாம் நன்கு தெரியும் போலிருக்கிறதே!

கே: மணவாத மல்லிகையார் தென் இந்திய பழைய சஞ்சிகைகளைத் தேடி வாங்குவதின் நோக்கம் என்ன?

ப: பாதுகை போல மேலும் பல திருட்டுக்களில் ஈடுபடுவதற்காக இருக்குமோ...?

சரவணபவன்,
நொச்சிக்குளம்,
வவுனியா.

கே: கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் தமிழரசு மாநாட்டில் அடலேறு ஆலாலசுந்தரம் முழங்கப் போகிறார். சங்கரி என்ன செய்யப் போகிறார்!

ப: கிலிபிடித்து பிதற்றப் போகிறார்!

ஃ

க. கார்த்திகேசு,
முத்து ஐயன் கட்டு.

கே: எமது பகுதியில் அண்மையில் திறக்கப்பட்ட தபால் நிலைய திறப்பு விழாவுக்கு ஆனந்த சங்கரியார் வருவதாக அழைப்பிதழ்களில் கண்ட இளைஞர்கள் தெருக்களிலும் பாலங்களிலும் மதில்களிலும் சங்கரியே திரும்பிப் போ! தமிழ் இனத் துரோகியே திரும்பு என்றெல்லாம் சுலோகங்கள் எழுதிவைத்திருந்தார்களே அதுபற்றி உங்கள் கருத்து யாது?

ப: இளைஞர்கள் விழித்து விட்டார்கள்; இனி துரோகிகள் தலைகாட்ட முடியாதென்று நினைக்கிறேன்!

ஃ

கு. கிருஷ்ணமூர்த்தி,
உருத்திரபுரம்.

கே: கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சி மாநாடு தடல் புடலாக நடக்க சங்கரியார் கிளிநொச்சியில் இருந்து யாது செய்யப் போகிறார்?

ப: 'அணில் ஏறவிட்ட...... போல' பரிதாபப் பார்வை பார்க்கப் போகிறார்!

ஃ

செ. அருள்மோகன்,
தையிட்டி,
காங்கேசன்துறை.

கே: கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சி மாநாடு நடத்துவதற்கு தான் அனுமதிக்கப் போவதில்லையென்று கூறித் திரிகிறாராம் சங்கரியார். இதனால் மாநாடு நடக்காமல் விட்டுவிடுமா?

ப: கிளிநொச்சித் தொகுதி ஆனந்தசங்கரியின் சீதனமோ முதுசொமோ அல்ல! கிளிநொச்சியில் மாநாடு நடத்துவதற்கு அனுமதிக்கவோ அனுமதி மறுக்கவோ யார் இந்தச் சுண்டைக்காய்ச் சங்கரி? ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் — தமிழரசுக்கட்சி இதுவரை காலமும் முன்வைத்த காலைப் பின்வைத்ததுமில்லை! இனியும் பின்வைக்காது!!

ஃ

வெட்டிஒட்டப்பட வேண்டிய முகவரி—
திருவாளர் குயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு—12

## வங்கத்தை வாழ்த்தி....

(சர்வசித்தன்)

குட்டக் குனிந்து குனிந்தே இருந்தவன்
உண்மை உணர்ந்து விட்டான்—தோள்
தட்டிப்படை கொண்டு தனக்கொரு நாட்டினைச்
சமைத்து முடித்து விட்டான்

கத்தியும் பீரங்கிக்குண்டும அவர்களைக்
கலங்கிட வைக்கவில்லை—அது
நித்தியமான சுதந்திர தேசத்தை
நிறுவிடு எனச் சொன்னதோ—?

உணர்ச்சிக் கனலினை மூட்டிய தந்தை அம்
முஜிபுர் சொன்ன வழி—மனத்
துணிவுடன் வங்காள மக்களும் சேர்ந்தின்று
துட்டரை மாய்த்து விட்டார்!

வங்கத்தின் மைந்தர்கள் ஈட்டிய வெற்றியை
வாழ்த்தி அமைதி கொள்வோம்!—உணர்வு
பொங்கிப் புது வழி போகும் அம்மாந்தரைப்
போல நாம் செல்வதென்றோ...?

★ ★

## வங்காள தேசம் நீ வாழ்க!

(காரை—மணியம்)

துப்பாக்கி வேட்டா தூநமக்கு என்றார்த்து
தப்பாமல் தாய்நாடு தனைக்காக்க(த்) தம்முடலை(ச்)
செங்குருதி நீராட்டித் தீரமுடன் வெற்றிகண்ட
வங்காள தேசம் நீ வாழ்க!

தம் உரிமை கோரி தனியாட்சி தாமமைத்து
தம் இனத்தைக் காத்த தனித் தலைவன்—முஜிபுமானை
எம் தலைவன் எனக்கூறி இறுமாப்புடன் வாழும்
வங்காள தேசம் நீ வாழ்க!

மொழி இனத்தைக் காக்காமல் இழிவாழ்வு
வாழ்ந்திட்டால்
பழிசொல்லும் வரும்காலம் என உணர்ந்து போரிட்டு
தம் மொழியைக் காக்க தம்முயிரைத் தாமீந்த
வங்காள தேசம் நீ வாழ்க!

(வேறு)

ஈழத் தமிழகமே இன்னுமா ஒத்துழைப்பு
வானைப் பிளக்கட்டும் வண்டமிழர்—போர் முரசு
வங்கம் வழியாகும் வன்னியரின நெஞ்சு நிறை
தங்கத் தமிழரசு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

**கோவை-மகேசன்**

## (1) தமிழ்நாடும் இலங்கையும்

பாவேந்தர் பாரிதிதாசன் அவர்கள், இலங்கையைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் தனது வலது கையை மேலேயுயர்த்தி 'இலங்கை, தமிழ் நாட்டின் அடுத்த தெரு' என்று கூறுவதுண்டு.

ஆனல் என்னைக் கேட்டால் இலங்கை, தமிழ் நாட்டின் அடுத்ததெரு அல்ல—இலங்கையும் தமிழ் நாடும் ஒரே தெருவிலேயே இருக்கின்றன என்று கூறுவேன்.

ஏனெனில் தமிழ் நாடும் இலங்கையும் அவ்வளவு தூரம் பலதுறைகளில் மிக நெருங்கிய உறவும் ஒற்றுமையும் உள்ளவை.

நான் இங்கே 'இலங்கை' என்று குறிப்பிடுவது தமிழ் இலங்கையைத்தான்: சிங்கள 'ஸ்ரீலங்காவை' அல்ல—

சிங்கள இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கு மிடையே கூட ஒரு காலத்தில் மிக நெருங்கிய நட்பும் தொடர்பும் இருந்ததாக வரலாற்று ஏடுகள் பேசுகின்றன.

சிங்கள மன்னர்கள் பலர் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் படை உதவி கோரிச் சென்றிருக்கிறார்கள்;(கடந்த ஏப்ரலில் ஏற்பட்ட நெருக்கடி நிலையின் போது கூட படை உதவி கோரியது இந்தியாவிடம்தான்)அடைக்கலமாக சென்று தமக்கு பாதுகாப்பு கோரியிருக்கிறார்கள்; 'பெண்' கேட்டுக் கூட சென்றிருக்கிறார்கள்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலையெடுத்த விழாவுக்கு சிங்கள அரசனை 'கடல்சூழ் இலங்கை கயவாகு மன்னனும்' சென்றிருந்ததாக சிலப்பதிகாரம் பேசுகிறது:

சிங்கள மன்னர்கள் பலர் தமிழ் நாடடுக்கு திறை செலுத்தியும் வந்திருக்கிறார்கள்.

சிங்கள இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கு மிடையே இப்படி பல தொடர்புகள் இருந்து வந்தபோதிலும் இன்றைய நிலை அதற்கு நேர் முரண்பட்டதாகவே இருக்கிறது:

சிங்கள அரசியல் வாதிகளும் பத்திரிகைகளும் சிங்கள மக்களிடையே தமிழ் நாட்டுக்கு எதிரான கசப்புணர்வை — வெறுப்பை — போக்க முடியாத அளவுக்கு இன்று வளர்த்து விட்டிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து பல தலைமுறைகளுக்கு முன்பு இங்கு வந்து இரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி, அட்டைக் கடிக்கும் தொற்று நோய்களுக்கும் ஆளாகி, தமது உடலையே எருவாக்கி, இலங்கையின் மலைநாட்டுப் பகுதியை பொன்கொழிக்கும் பூமியாக்கி வைத்த தமிழ் தோட்டத் தொழிலாளர்களை 'கள்ளத்தோணி' என்று கூறி நாட்டைவிட்டு விரட்ட வேண்டுமென்று நன்றி கெட்டு ஒரே பிடிவாதமாக நிற்கிறார்கள் சிங்கள மக்கள்!

இந்தியர்களை குறிப்பாக தமிழர்களை 'கள்ளத்தோணி' என்று கிண்டல் செய்ய இன்று எந்தச் சிங்களவனும் தயங்குவதில்லை.

சிங்கள மக்களிடையே இந்நாட்டுத் தமிழர்களுக்கு எதிராக விதைக்கப்பட்ட துவேஷ உணர்வு இப்பொழுது தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் எதிரானதாக பூதாகாரமாக வளர்ந்துவிட்டது:

ஆனல் தமிழ் இலங்கையைப் பொறுத்தவரை தமிழ் நாடும் தமிழ் இலங்கையும் ஒரே உணர்ச்சி [illegible]வையாகவே அன்றும் இன்றும் இருந்துவருகின்றன.

பேசும்மொழியால்—இனத்தால், கலாசாரத்தால், ஒத்த உணர்வால், தமிழ் இலங்கையும் தமிழ் நாடும் இணைந்து இருப்பதுமட்டுமல்ல—தட்பவெட்பங்களாலும், இயற்கை அமைப்புக்களாலும் கூட ஒரே தன்மையுடையனவாகவே இருக்கின்றன. அலைகடலும் அரசியலமைப்பும் தான் தமிழ் இலங்கையையும் தமிழ் நாட்டையும் இன்று பிரித்து நிற்கின்றன.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்கின்ற பாரதிபாடலை வானொலியில் கேட்கவிடாது இலங்கை அரசு தடைசெய்தாலும் —இலங்கைத் தமிழ் வேறு; இந்தியத் தமிழ் வேறு; என்று கூறி தமிழ் மொழியின் ஒருமைப்பாட்டை சிதைத்திட இந்நாட்டிலுள்ள சில தமிழ்த் துரோகிகள் முயன்றாலும்—தமிழக தமிழ் இலங்கை உறவை அறுத்தெறியும் நோக்குடன் தமிழ் நாட்டு ஏடுகள் இறக்குமதியை இலங்கை அரசு தடைசெய்தாலும் — தமிழ் நாடும் ஈழத் தமிழகமும் இணைந்து செயல்படும் ஒளிமயமான எதிர்காலம் ஒன்று உருவாகப் போவதை யாராலும் தடுக்கமுடியாதென்பது என் உறுதியான நம்பிக்கை!

'கடல் நீர் ஏன் கரிக்கிறது தெரியுமா? —இலங்கைத் தமிழர்கள் வடித்த கண்ணீர் தான் கடலுள் கலந்து இப்படிக் கரிக்கிறது' என்று ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள் தமக்கேயுரிய பாச உணர்வுடன் கூறினார்கள்.

அந்தப் பாசத் தலைவன்—உலகத் தமிழர்களின் கலங்கரை விளக்கமாக இருந்த தமிழ் முத்து — பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த செய்தி கேட்டபோது தமிழ் இலங்கை முழுவதும் மரண வீடாக மாறிய காட்சி இப்போதும் எப்போதும் மறக்க முடியாத காட்சி.

அண்ணாவை முன் பின் பார்க்காதவர்கள்— அண்ணா பேச்சைக் கேட்காதவர்கள் அண்ணாவின் கொள்கைகளை ஏற்காதவர்கள் கூட —அண்ணா மறைந்தார் என்பதறிந்தவுடன் வெய்துயிர்த்து வெம்பி அழுது அரற்றி துடித்ததை தமிழ் நாட்டார் கண்டிருந்தால் இலங்கைத் தமிழர்கள் அண்ணாமீது எத்துணை பாசத்தையும் பற்றையும் கொட்டி வைத்திருந்தார்கள் என்பதை உணர்ந்திருப்பார்கள்.

இலங்கையும் தமிழ்நாடும் ஒரே 'தெருவில்' இருப்பதாலேயே இவ்வளவு தூரம் உணர்ச்சிபூர்வமான ஒருமைப்பாட்டையும் உறவையும் காணமுடிகிறது என்று நான் கருதுகிறேன்.

தமிழ் நாட்டில் நான் இருந்த நாட்களில் ஏதோ புது இடத்தில் இருப்பது போன்ற உணர்வு எனக்கு இஞ்சிற்றும் தோன்றவில்லை.

இன்னும் சொல்லப்போனல்—

இலங்கையில் இருப்பதை விட மகிழ்ச்சியும் உள நிறைவும் தமிழ் நாட்டிலிருந்தபோது எனக்கு ஏற்பட்டது. தமிழ்நாட்டில் அண்ணா அமைத்த ஆட்சியில் வீசும தமிழ் காற்றை 'நிம்மதியாக' சுவாசிக்க என்னல் முடிந்தது.

எனது தமிழ்நாட்டுப் பயணத்தின் நோக்கமென்ன? இப்பயணத்திற்கான திட்டம் எப்படி உருவாயிற்று? என்பது பற்றியெல்லாம் அடுத்த வாரம் எழுதுகிறேன்.

## செய்திச் சிதறல்கள்!

O ஊரடங்கு சட்டம் நீக்கப் பட்ட பின்னும், கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த தமிழ் பொலீஸ் அதிகாரியொருவர், பொதுமக்களை— குறிப்பாக கோண்டாவில் பகுதி வாலிபர்களை—மிருகத்தனமாக தாக்குவதைக் கைவிடாது ஒரு குட்டி சர்வாதிகாரி போல நடந்து வருவதைக் கண்டு—இவரும் சோசலிசவாதிகளின் அடிவருடியோ என்று கேட்கிறார்கள் பொது மக்கள்!

O காவடியின் ஊரைச் சேர்ந்த கிராம சபைத் தலைவர் ஒருவரும் காவடியின் வால் பிடி. ஒட்டைவாயர் ஒருவரும் சேர்ந்து தமிழரசு ஆதரவாளரான இடைப்பிட்டியை சேர்ந்த வேரப்பிட்டி சிறீ கணேச வித்தியாசாலை ஆசிரியர் ஒருவரை தாக்க போட்ட திட்டம் தவிடுபொடியாகப்போகவே, அந்த அப்பாவி ஆசிரியரின் தகப்பனை தாக்கினர்களாம்—இது குறித்து பொலிசுக்கு முறைப்பாடு செய்தும் விழலுக் கிறைத்த நீராயிற்றும்.

O அண்மையில் மூதூரில் தமிழரசுக் கட்சி அனுதாபிகளால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் கலந்து கொண்ட ஒரே குற்றத்துக்காக மூதூர் பகுதியில் உள்ள தமிழ் கலவன் பாடசாலையொன்றில் படிக்கும் [illegible]வர்கள் பலரை ஆளுந[illegible] வால் பிடியான மேற்படி பாடசாலை அதிபர் பாடசாலையை விட்டு ஒருநாள் வெளியேற்றி விட்டு பெற்றோர்களின் எதிர்ப்பால் மறுநாள் மீண்டும் சேர்த்துக்கொண்ட நிகழ்ச்சி மூதூர் தமிழர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

O பலது கண்ட சங்கரவின் பூனகரி ஏஜன்டு என்று கூறித்திரியும் வால்பிடி ஒருவர், ப. நோ. கூ. சங்கத்தில் காலியான இடங்களுக்கு பொதுமக்களுக்கு எதுவித விளம்பரமோ, அறிவித்தலோ கொடுக்காமல், இரகசியமாக தமது உறவினர்களை நியமித்துள்ளாராம்—இது சம்பந்தமாக பலது கண்ட சங்கரனுக்கும் முறைப்பாடு போயுள்ளதாம்—

O ஜனுப் கமால்தீன் என்பவர் உதவி நூலக அதிபராக இருந்தும் கொழும்பு பொது நூலகத்தில் கடந்த ஐந்தாண்டு காலமாக தமிழ் நூல்கள் வாசகர்களின் பாவனைக்கு வெளியே இடப்படாமல் இருட்டறையில் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாம்.

O மட்டுநகர் சுகாதார சேவை அத்தியட்சகர் ஒரு தமிழராக இருந்தும் சிங்கள லிகிதர்கட்கு அஞ்சுகிறாராம்; தமிழ்க்கடிதங்களுக்கு, சிங்களத்தின் பதில் எழுதும் [illegible] சிங்களத்திலே அனுப்புவதற்கு கையெழுத்திட்டு விடுகிறாராம்—தம்பானம் வெளிகாயான் குடா கிராம முன்னேற்ற சங்கத்தினர் மட்டக்களப்பு சுகாதார சேவை திணைக்களத்துக்கு தங்கள் கிராமத்துக்கு ஒரு நடமாடும் மருந்துச்சாலை அமைத்து தரும்படி கேட்டதற்கு சுகாதார சேவைத் திணைக்களம் தனிச்சிங்களத்தில் அனுப்பியபதிலைமேற்படி கி. மு. தலைவர் அ. தர்மரத்தினம் உடனே திருப்பி அனுப்பிவிட்டார்!

O பருத்தித்துறை காட்லிக் கல்லூரியின் உயர்தர மாணவர் விருந்துக்கு துரோகப்பாவை அழைக்கமேற்படி கல்லூரி அதிபர் செய்துள்ள முடிவை இன உணர்ச்சி மிக்க மேற்படி கல்லூரி மாணவர்கள் கடுமையாக எதிர்த்ததுடன், விருந்துக்கு துரோகப்பா அழைக்கப்பட்டால் விருந்தை தாங்கள் பகிஷ்கரிக்கப் போவதுடன் துரோகப்பாவுக்கு கறுப்புக் கொடி காட்டப் போவதாகவும் பயமுறுத்தியுள்ளனர்.

O மூதூர் பிரிவு ப: நோ: கூ. சங்கத்தில் சர்வாதிகாரம் தலை தூக்கியுள்ளதாகவும், தலைவரோ 'வடி' வேலனுடன் கொண்டாட்டம் புரிவதாகவும் ஊரெல்[illegible] பேச்சடிபடுகிறது— தமிழ் வாலிபனின் வேலை

(11ம் பக்கம் பார்க்க)

### உங்களுடன் ஒரு நிமிடம்

அன்புள்ள வாசக நண்பர்களே,

இத்தொடர் கட்டுரையை எழுதுவோமா விடுவோமா என்று பல நாட்களாக நான் சிந்தித்ததுண்டு. ஏனெனில் வெளிநாடு செல்பவர்கள் எல்லாம் பயணக் கட்டுரைகள் என்ற பெயரில் 'வழவழா' என்று வாரக்கணக்காக விளக்கெண்ணெய் கட்டுரைகளை எழுதி பத்திரிகை வாசகர்களை 'போர்' அடித்து வரும்காலம் இக்காலம். இன்னும் சிலர்-கல்கியின் மறுபிறப்பு தாமேயென்று தம்மை எண்ணிக்கொள்பவர்கள் —மற்றவர்களைத் திட்டுவதற்கென்றே இத்தகைய தொடர் கட்டுரைகளை தாங்கள் ஆசிரியர்களாக இருக்கும் ஏடுகளின் பக்கம்பக்கமாக எழுதியதை வாசகர்கள் அறிவார்கள்.

என்னைப் பொறுத்தவரை வாசகர்களின் கருத்தறிந்தே நான் பத்திரிகையை நடத்திச் செல்ல விரும்புபவன். நான் சுதந்திரனில் ஆசிரியனுக இருக்கிறேன் என்பதற்காக-வாசகர்களின் விருப்பங்களைக் கவனியாமல்-எல்லாம் எனது கட்டுரைகளாகவே எழுதி வாசகர்களிடம் திணிக்க வேண்டும் என்கிற சுயநல நோக்கம் எனக்கு [illegible]யும் கிடையாது.

வாசகர்கள் என் கட்டுரைகளை விரும்பி வ[illegible]வேற்கிறார்களா; ஆ[illegible]முடன் வாசிக்கிறார்களா. என்பதை அறிந்த பின்பே தமிழகப்பயணம் பற்றிய கட்டுரையை எழுதுவதுபற்றி முடிவெடுக்க தீர்மானித்திருந்தேன்; அதனல்தான் நான் எழுதியிருந்த 'அரசியல்மடல்' ஒன்றில் இத்தொடர் கட்டுரையை எழுதுவதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பை வாசகர்களிடமே விட்டிருந்தேன்.

ஏராளமான வாசக நண்பர்கள் தமிழகப் பயணம் பற்றிய கட்டுரையை நீங்கள் எழுதியே தீரவேண்டும் என்று எனக்கு அன்புக் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். 'அண்ணாவின் மீது ஆணை ......நீங்கள் கட்டுரையை எழுதியே ஆகவேண்டும்' என்றும் சில நண்பர்கள் எழுதியிருக்கிறார்கள்.

'பேரறிஞர் அண்ணாவை இதயத்தில் வைத்துப் போற்றுபவன் இவன்; எனவே அண்ணா மீது ஆணையிட்டு விட்ட பின் இவன் தப்பமுடியாது; எழுதியே தீருவான்' என்கிற முழு நம்பிக்கை அவர்களுக்கு...!

பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் தனது எழுத்துக்களை ஆர்வத்துடன் விரும்பிப் படிக்கிறார்கள் என்பதை அறியும்போது அடையும் மகிழ்ச்சியை விட ஒரு எழுத்தாளனுக்கு வேறு எது மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தரமுடியுமா?

இக்கட்டுரையைக் கடந்த ஜூன் மாதத்தில் எழுதவிருந்தேன். ஆயினும் அன்றைய அரசியல் நிலையில் தணிக்கை அதிகாரி இக்கட்டுரைக்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டார்.

எனது அபிமான வாசகர்களின் கட்டளைப்படி இதோ இவ்வாரம் 'தமிழகப் பயணம் பற்றிய தொடர் கட்டுரை ஆரம்பமாகிறது-படித்து கருத்துக்களை எழுதுங்கள்—

அன்பன்,

கோவை மகேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நிற்பவை

## 16. தடுப்புக்காவலில் நாகநாதன்

சல்லி, சாராயம், சேலை— என்றிவ்வாறு 'சகர' வரிசைக்காக மட்டுமே ஆயிரமாயிரமாக—ஏன், இலட்சமாகக் கூட — இறைத்து தேர்தற்களத்தில் 'விழுப்புண்' பட்ட வேட்பாளர்களைத்தான் அரசியல் அவதானிகள் சந்தித்திருக்கின்றனர். 1960 ஆம் ஆண்டின் இரு தேர்தல்களும் தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரையில் இந் நடைமுறைக்குப் புறநடையாக அமைந்தன. தலைவர்களும் தொண்டர்களும் இலட்சிய வெறியராய் தீவிர சக்தியுடனும் சிந்தனைகளுடனும் இயங்கிய இதகிதமான நாட்கள் அவை. இலங்கைத் தமிழ் மக்களின் உடன்கால வரலாற்றில் (Contemporary History) ஈடும் இணையுமில்லாத அத்தியாயமான 1961ன் அறப்போர்ப் பரணியைப் பாடுதற்கு இன்னும் பத்துமாதங்களே இருந்தன. பத்துமாதங்களுக்கு முன்னதாகவே பாசறையில் நடைபோடும் பட்டாளப் பான்மையும் படைக்கலப் பரிகரணமும் தமிழரசு வாலிபர்களின் உணர்வுகளில் படிந்திருந்தன.

### இரு தேர்தல்கள்:

அச்சூழலிலே நடைபெற்ற இரு தேர்தல்களும் மிகவும் உணர்ச்சிகரமானவை; தமிழ் மக்களின் மனமட்டத்திலே கிளர்ந்தெழுந்த கேள்விக் குறிகளுக்கு விடையாக உறுதிப்பாடுகள் சிலவற்றைக் கோடிட்டுக்காட்டியவை. அத்தேர்தலிலே மாற்று அணிகள் தமிழரசு அணியின் பேராற்றலுக்கு அஞ்சி மருண்டோடின. வேட்பாளர் என்ற பெயரில் அவர்களால் நிறுத்தப்பட்ட பொம்மைகளெல்லாம் தேர்தல் தொடங்க முன்பாகவே தடால் தடாலென்று தடம் புரண்டன. தமிழரசுக்கட்சியைத் தனித்தனியே சந்திக்க முடியாத வலதுசாரி — இடதுசாரிக்கட்சிகள் தமது வர்க்க நல வாதங்களைச் சோரம் போகவிட்டு சும்முள் பேரம் பேசிக்கொண்டன. மாற்றுக் கட்சி மேடைகளிலே பேச்சாளிக்கும் பெருச்சாளிக்கும் வேற்றுமைகாண முடியாதவாறு, பேருக்கொரு பேச்சாளர் ஊருக்கொரு ஒப்பாரியை முகாரியில் அழவா அல்லது மோகனத்தில் பாடவா எனக் குழம்பிக்கொண்டிருந்தார் — ஒரே கொள்கைக் குழப்பம்.

### தங்கப்பாளங்கள்:

இந்நிலையில் இத்தேர்தலில் தமிழரசுக் கட்சி மட்டும் தனது கொள்கைகளைத் தெளிவுடன் வகுத்து, வேலைத்திட்டங்களை விளக்கி, தங்கப் பாளங்களையொப்பத் தகத்த காயத்துடன் மக்கள் மன்றத்திலே வைத்தது. தமிழரசு வேட்பாளர்களின் வெற்றியைத் தென்னிலங்கை அரசியலாரும் எதிர்பார்த்திருந்தனர். கட்சியின் வெற்றிக்காக ஊணுறக்கமின்றி உழைத்துப் பழக்கப்பட்ட கணமணியான கட்சித் தொண்டர்கள், தத்தம் தொகுதியின் பெரும்பான்மையே பெரியதாயிருக்கும் என மற்றைய தொகுதித் தொண்டர்களிடம் மல்லுக் கட்டி நின்றனர்; வேட்பாளர் அறியாமலே ஆங்காங்கு கூட்டங்கள் பிரமாண்டமான அணிமணியலங்காரங்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டன- கூட்டங்களைச் சிகரங்கள் சிங்காரித்தன. சப்பறங்கள் அலங்கரித்தன; அபிமானத்திற்குரிய பேச்சாளர்களை வேறு தொகுதிக் கூட்டங்களிலிருந்து 'பிடுங்கி' வருவதற்கென மோட்டார் வண்டிகள் பறந்தன. நாலைந்து கூட்டங்கள் ஒரு தொகுதியில் ஓரிரவிலேயே நடைபெற்றன. எவரின் செலவு? எவரின் ஏற்பாடு? எங்கெங்கு கூட்டங்கள்? எதுவுமே வேட்பாளருக்குத் தெரியாது. வேட்பாளர் ஆதரவாளரின் ஆதரவு தாங்கமுடியாது மூச்சுத்திணறிப் போயிருந்தார். ஆங்காங்கு பொது மக்கள் பணம் திரட்டிக் கூட்டங்களை நடத்தினர்.

### அற்புதம்:

நல்லூர்த் தொகுதி மட்டும் சோடைபோய் விடுமா என்ன? இந்த அன்பு வெள்ளத்திலே அமிழ்ந்து விட்டார் டொக்டர். மற்றைய தொகுதி வேட்பாளருக்காவது ஆயிரம் இரண்டாயிரமாவது அவர் மடியிலிருந்து செலவாகியிருக்கும். டொக்டர் விடயத்தில் அதுகூட இல்லை; அதற்கு மாறாக, தாம் மார்ச் மாதத் தேர்தலில் வெற்றி பெற்று கொழும்புக்குப் புறப்பட்ட நேரத்தில் சில இளைஞர்கள் அவரிடம் ஐம்பது ரூபாவைக் கொடுத்து 'செலவு போக எஞ்சிய பணம், கைச் செலவுக்கு வைத்திருங்கள்' என்று வழியனுப்பி வைத்தார்களாம். இதைக் கூறும் போது டொக்டரின் குரல் பெருமையுடனும், நன்றியுடனும் கனிந்திருந்தது. இலங்கையின் எத்தொகுதியிலும் ஆனைப்பட்ட எந்த அரசியல் வாதியும் இந்த அற்புதத்தை நிகழ்த்தியிருக்க முடியாது என்பேன். வர்த்தகவரன் முறைகளை அன்று கண்டறியாத நல்லூர்த் தொகுதியிலேதான் இந்த அற்புதம் நிகழ முடிந்தது; நாகநாதனாலேதான் நிகழ்த்தவும் முடிந்தது.

### மக்கள் சக்தி

பொதுமக்கள் மத்தியிலான தமது அரசியல் அடித்தளம்—(தேர்தற்றேவைகளுக்குப் போதுமானதோ அல்லவோ என்பது ஒரு பொருட்டன்று)— ஆழமானதும் சுலபமானதும் என டொக்டர் நம்பினார். இதனால் தேர்தல்களைச் சந்திப்பதற்கு அவர் கூச்சப்படவில்லை. தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் தேர்தல்களை எதிர் நோக்குவதற்குத் தயங்கியதில்லை. தேர்தல்களில் வெற்றி தோல்வி ஒருபுறமிருக்க, ஈழத்தமிழகத்தில் அமைப்பு ரீதியாக தலையாய மக்களணியைக் கட்டியாள்வது இன்றும் தமிழரசுக்கட்சியே. இத்தகைய பாரிய மக்கள் சக்தியை வைத்துக் கொண்டு மார்பு தட்டுகின்ற யோக்கியதை ஈழத் தமிழக அரசியலரங்கில் வேறெந்தக் கட்சிக்கும் இடையில் இந்த வலிமை இருப்பதன்றான் தேர்தல்களையிட்டு தமிழரசுக் கட்சிக்குக் கூதல் ஏற்படுவதில்லை: இதை நிறுவ நிகழ்ச்சியொன்றைக் கூறுவேன்.

### தடுப்புக் காவல்

1961 ஆம் ஆண்டின் அறப்போரைத் தொடர்ந்து கட்சித் தலைவர்களும் தொண்டர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுப் பனாகொடை இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் காவலில் இருந்தனர். மூன்று மாதங்கள் தொடர்ந்து அவர்கள் நாடாளுமன்றம் செல்லாவிட்டால் அவர்களது நாடாளுமன்ற உறுப்பாண்மை வறிதாகும். இதைத் தவிர்ப்பதற்கு இருந்த ஒரே வழி நாடாளுமன்றத்தில் வேறு உறுப்பினர் எவரும் எழுந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழரசு உறுப்பினர்களுக்கு மூன்று மாத விடுமுறை கோரித் தீர்மானம் கொண்டு வருவது தான்; டொக்டரின் மூளை புரட்சிகரமாக இயங்கிற்று. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த உறுப்பினர் எவரும் விடுமுறைகோரி விண்ணப்பிக்காது, தமது இடங்கள் வெற்றாகுமாறு (vacant) செய்வதென்றும், அதனால் தமிழ் மாநிலத்தில் இடைத் தேர்தல்களை ஏற்படுத்தி, அரசாங்கத்தின் அரசியல் முடிச்சுக்களைச் சிக்கலாக்கி, தமிழ் கிளர்ச்சிக்கு வலுவூட்ட வேண்டுமென்றும் எண்ணினார். முன்னாள் தீவுப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், அப்போது (நா. உ. அல்லாது) கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவருமான திரு. வ. நவரத்தினம் கட்சியின் வேலைத் திட்டங்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் டொக்டருடன் பிணங்கி நின்றவர். அவருக்கும் டொக்டரின் இத்திட்டம் மெச்சத்தகுந்ததாயிருந்தமை குறிப்பிடத்தக்கது. அண்ணன் அமிர்தலிங்கத்திற்கு இத்திட்டம் உவப்பாயிருந்தது. [அன்று பிற்பகல் கூடி இதுபற்றி முடிவெடுப்பதென்று உடன்பாடாயிருந்தது. தமிழ் மக்களின் உரிமைப்போரின் தொடர்பில் புதிய வாயில்களைத் திறந்திருக்கக்கூடிய இத்திட்டம், வேறோர் அணியிலிருந்து கட்சிக்குவந்த புதுமுகம் ஒருவர் செய்த விபரீதத்தால் தவிடுபொடியாயிற்று. தமது பதவியைப் பற்றியே கண்ணுங்கருத்துமாகவிருந்த இவ்வுறுப்பினர் கட்சியினரைக் கேட்காமலேயே ஏற்கனவே தமக்கு விடுமுறைகோரி விண்ணப்பித்து விட்டார். (இவர் பின்னர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டிருந்தார்.) டொக்டருக்குக் குமுறிக்கொண்டு வந்ததே கோபம். கை முஷ்டியை மடக்கிக்கொண்டு இவ்வுறுப்பினரை நோக்கி வந்தார் அண்ணன் அமிர்தலிங்கம் ஓடிவந்து குறுக்கிட்டு டொக்டரை விலக்கி விட்... விலக்கும் போதும் ... அண்ணன் அமிர்த...

—கரிகாலன்—

(11ம் பக்கம் பா...


# லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

12 வருட (மாமாங்க) காலத்திற்குள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வியாபார தர்மத்திற்கமைய மாபெரும்

## புரட்சியை ஏற்படுத்திய லீலா

ஈழத்தில் தோன்றி ஞான ஒளி பரப்பிய யோகிகள் ஞானிகள் - சாதுக்கள் - சித்தர்கள் - பித்தர்கள் - ஞாபகச் சின்னங்கள் முதலியவற்றை 'லீலா' வில் தரிசியுங்கள்!

மிருசுவிலில் 80 பரப்பு தென்னங் காணியில் மடாலயம். ஜன. 18ந் திகதி இதழில்

பொன்னம்மா ஞானி ஜூலை 5

ஏழாலை அழகுற அமைந்த 3 கோயிலும் மடாலயமும் கோவிலுக்கு வடக்கே சமாதி முறையே அக்டோ. 14, ஜன. 5 ஆகஸ்ட். 19ந் திகதி இதழ்களில்.

நல்லூர் நாவலர் சிலை மண்டபம் மே 10ந் திகதி இதழ்

அம்மையினுன் வளவில் ஞாபகச் சின்னம் யார்? பெப். 7

தாய்க்குல ஞானி கீரிமலையில் சமாதி யார்? ஆக 12-ல்

கொழும்புத்துறை யோகர் சுவாமி ஆச்சிரமம் மார்ச் 25

ஒட்டுமடம் சமாதிக் கோயிலும் அன்னதான மடமும் யாரது நினைவு? மார்ச் 27-ல்

மாத்தளை பரமகுரு சுவாமி சமாதி. ஏப். 10ந் திகதி இதழில்

எழுவைதீவு தாய்க்குல ஞானி யார்? ஏப்ரல் 20ந் திகதி

மண்டதீவு கடையிற்சுவாமி சீடன் சமாதி மே 9ந் திகதி

கடையிற் சுவாமி நினைவுச் சின்னம் ஜூலை 8ந் திகதி இதழ்

தில்லைநாயகி அம்மையை விவாகம் செய்து 80 தினங்களில் சமாதி கோயில்; யாருடையது? ஏப் 1ந் திகதி இதழில்

கொடிகாமம் கோயிலில் சமாதி யார்? ஜூன் 11-ந் திகதி

பளை பழனி ஆண்டவர் மடாலயம். ஜூலை 3ந் திகதி இதழில்

அளவெட்டி கூத்தஞ்சிமாவடிச் சமாதிக்கோவில் யார்? சித்தர் யார்? செப். 12ந் திகதி

மறுவன்புலவு சுத்த சிவ சன்மார்க்க சாது சங்க குரு பீட சமாதிக் கோயில், மடாலயம். செப். 18ந் திகதி இதழில்

கொழும்பில் முதன்முதல் இராமநாதன் நினைவுதினம் கொண்டாடிய சங்கம் எது? தலைவர் யார்? செப். 27ந் திகதி

கச்சதீவு ஆகாயத்திலிருந்து தோற்றம். நவ. 16ந் திகதி

கிளிநொச்சி காந்தி சேவா சங்கம், நவ. 19ந் திகதி இதழில்

வட மாகாண டக்டர்கள் 1848-ல் டக்டர் ஹிறீனின் யாழ் வைத்திய மாணாக்கர்கள். ஜூன் 27-ந் திகதி இதழ்

வல்லை முதுபெரும் புலவர் யார்? செப். 3ந் திகதி இதழ்

கொத்மலை குயீன்ஸ்பரித் தோட்ட சமாதி யார்? மார்ச் 29

சுதுமலை

சைவ சமயத் தொண்டர் யார்? மடாலயம்? ஜனவரி 17

சுன்னுகம் தாய்க்குல ஞானி முறையே ஜன 23 பெப் 29

நயினை கங்காதரணிக்கு அருகாமையில் சமாதிகொண்டது யார்? ஜனவரி 26ந் திகதி

நீராவியடி (யாழ்)

கடையிற்சுவாமி சமாதிக் கோயில்? மார்ச் 8ந் திகதியில்

கீரிமலை

குழந்தைவேற்சுவாமி சமாதிக்கோயில். மார்ச் 22 ந் திகதி

பாரதம் 'இலட்சுமி' பசு சமாதியை நிர்மாணித்தது யார்? ஏப். 6ந் திகதி இதழில்

காதல் சமாதி. அக். 5ந் திகதி

யாழ். சிவன்கோவிலடி உத்தம துறவி யார்? ஏப்பிரல் 22

வட்டுக்கோட்டை 105 வயது வாழ்ந்து சேவைசெய்த வைத்திய மேதை. நவ. 29-ந் திகதி

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடிச் சுவாமி கீரிமலை சமாதி ஜூன் 1ந் திகதி இதழில்

காரைத்தீவு (கி. மா.)

சித்தாண்டிக்குட்டிச் சமாதியும் மடாலயமும். ஆக. 10உ

முகத்துவாரம் ஆனைக்குட்டிச் சுவாமி சமாதி மருதானை கப்பித்தாவத்தையில் வாழ்ந்தவர். செப். 5ந் திகதி இதழில்

செங்கலடி யோகியும் விவசாயியும் ஆக. 11ந் திகதி

சிவயோக ஆச்சிரமம் டிசம். 7

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு வடக்கே சமாதி யார்? செப்டம்பர் 30

வியாபாரிமூலை

● மகாகவி பாரதியின் ஞான குரு சமாதிக் கோயில் நவ. 9

காங்கேசன்துறை மடாலயம் எவரின் ஞாபகம். டிச. 15

காரைநகர்

எதற்காக F.R.A.S. பட்டம்பெற்றவர்? ஜன 10ந் திகதி

வேலணை புகழ் பெற்ற அரசியல்வாதி யார்? ஜூன் 4

புங்குடுதீவு சமூக சமய கல்வி சேவையாளர் யார்? மார்ச்12ந்திகதி இதழைப்பார்க்க

கி. மா. பழம்பெரும் அரசியல்வாதி யார்? பெப்ர 1-ல்

இவை மட்டுமா? பாரததேசத்தில் தோன்றி உலகத்திற்கு ஞான ஒளி பரப்பிய தவசிரேஷ்டர்களையும் ரிஷிகளையும்

## 'லீலா' வில் தரிசிக்கத் தவறாதீர்கள்!

மிகக் குறுகிய காலத்திற்குள் காலனின் கண்பட்ட ஈழ அரசியல்வாதிகள் யார்? ● நல்லூர் இரும்புமனிதன் ஆக. 16ந் திகதி இதழைப் பார்க்கவும்

● தெல்லிப்பழை செ. 17உ

● வேலணை ஜூன் 4ந் திகதியில்

● திருமலை முறையே அக். 8, நவ. 8ந் திகதி இதழ்களைப் பார்க்கவும்

# லீலா

'லீலா' விற்பனையாளர்களுக்கும், இரசிகர்களுக்கும் ...ண்டாட்டம்! நகல் (கொப்பியடித்தல்) செய்பவருக்கு ...டாட்டம்; ஏமாற்றம்; பித்தக்கொதி; தலைவேதனை!

...கும் கிடைக்கும்! கேளுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுக்கப் பாய் இல்லை - புடைக்கச் சுளகில்லை

# புத்திரிகையளவில் பனம்பொருள் உற்பத்தி!

## பனம் பொருளாராய்ச்சியில் உடனடித் திட்டமென்ன?

வடக்கே வளர்ந்த பனைகள் பழம் போட்டு மடுருப்ப, ஓலைபோட்டு குப்பை நிறைக்க, தெற்கே பனங்கன்று நடும் பள்ளிச் சிறுவர் சிரமதானம். இதற்குள் பனம்பழம் சுவை பழகுவோருக்கு வெளிநாட்டில் ஆராய்ச்சி, சுயதேவைக்கு பெட்டி, கடகம் இல்லை. படுக்கப் பாய்இல்லை. புடைக்கச் சுளகு இல்லை. எட்டி நின்று ஏனைய்யா இப்படி ஆராய்ச்சி? வடபகுதி மக்களை பொருளாதாரத் திட்டத்திலுமா ஏமாற்றுவது? பனம்பொருள் அபிவிருத்தியின் உடனடி நடவடிக்கைக்கு, முதலில் ஆராய்ச்சி அவசியமா? நடைமுறைப் பனம்பொருள் உற்பத்தி செயல்முறைத் திட்டம் அவசியமா? கண்டிக்கவில்லை. தெண்டிக்கிறேன்.

இலங்கையின் வடபகுதியிலே (யாழ்ப்பாண மாவட்டம் வவுனியா மாவட்டம்) வளர்ந்து ஓங்கி நிற்கும் பனைவிருட்சங்களைக் கொண்டு அனேக பொருட்கள் உற்பத்தி செய்யலாம் என்பது, நடைமுறையில் உற்பத்தி செய்துவரும் பொருட்களைக் கொண்டு ஊகித்துக்கொள்வதோடு சிறந்த முறையில் திட்டம் அமைத்துச் செயல்பட்டால், அந்நியச் செலாவணியையும் நாம் சேகரிக்கலாம், என்பது உறுதி.

எம் அண்டை நாடான தமிழ்நாடு, பனந்தும்பு ஏற்றுமதி மூலம் ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் பெறுகின்றது என்று அறியக்கிடக்கிறது. இவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பும் தும்பைக் கொண்டு பிரஷ் வகைகள் செய்து எங்களுக்கு அனுப்ப, நாம் அதை அதிக விலைகொடுத்து வாங்குகிறோம். இதை எம்நாட்டிலேயே செய்தால் அதிக அளவு அந்நிய செலாவணியைச் சேகரிக்கலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளிலே சில பனம் பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். முல்லைத்தீவு காரியாதிகாரி பிரிவின்கீழ் வளர்ந்து நிற்கும் பனைகளைக் கொண்டு இற்றைவரையில் எதுவித பொருட்களையும் செய்ய அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆயிரமாயிரமாக வளர்ந்து ஓங்கி நிற்கும்பனைகள் நிறைந்த காடுகளை சொந்தக்காரர்கள் உயிலைக் கொண்டு சொந்தம் கொண்டாடுகிறார்கள். ஆனால் பனைகளோ தேவையற்றுக் கிடக்கின்றன:

இலங்கையின் உள்நாட்டில் பனம்பொருளைக் கொண்டு சாதாரணமாக உற்பத்திசெய்யும், பெட்டி, கடகம், சுளகு, பாய், விசிறி, நெல்லுப் போடும் கூடை, பனங்கட்டி, ஜேம், என்பன தேவைக்கு இல்லாமல் இருக்கின்றது: இவைகள் எந்த அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகின்றன, என்ன திட்டம் உள்ளது.

இப்படியான சூழ்நிலையில் முதலில் ஆராய்ச்சி அவசியம் தானா என்பது கேள்விக்குரிய விடயமாகும். ஓரளவுதன் னிறைவு பெற்ற தொழிலிலேயே, அதை மேலும் அபிவிருத்தி செய்ய ஆராய்ச்சி அவசியமாகின்றது. இல்லைலேல் புதிதாக ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு ஆராய்ச்சி செய்துதான் ஆரம்பிக்கப்படவேண்டிய இடத்தில் ஆராய்ச்சி அவசியமாகிறது. இவை இரண்டு காரணங்களிலும் பனம்பொருள் அபிவிருத்தி அடங்கவில்லை.

எனவே ஆராய்ச்சி செய்ய முன்பு நடைமுறைப் பனம் பொருள் உற்பத்தி செயல்முறைத் திட்டம் வகுக்கப்படவேண்டும்.

**‘முல்லை மயிலோன்’**

பனைமரங்கள் அழிக்கப்படாமல் இருக்கவும், திட்டங்களை தயாரிக்கவும், உதவியாக புள்ளி விபரங்கள் எடுக்கப்படாத இடங்களிலும், எடுக்கப்படவேண்டும்.

பனைவளம் உள்ள ஒவ்வொரு பகுதியிலும் பனம் பொருட்களை செய்வதற்கு உற்சாகமளித்து, அவர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யப்படவேண்டும். முதலில் இவர்களிடம் கொள்வனவு செய்யமுன்பு பின்வரும் நிபந்தனைகளுடன் விளம்பரம் செய்யப்படவேண்டும்.

(அ) ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள், ஆகக் கூடுதலாகவும், திறமையாகவும், உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களில் ஒரு குறிப்பிட்டோரை ஒரு சிறு கைத்தொழில் நிலையத்தில் வேலை கொடுக்கப்படும்.

(ஆ) உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் வகைகளும், விலைகளும் குறிப்பிட்டு, பொருட்கள் முழுவதும் கொள்வனவு செய்யப்படும்.

முதலாவது நிபந்தனையால் கறுப்புச் சந்தையைக் தடுத்துக் கொள்வதுடன் சிறந்த உற்பத்தியாளரையும் தெரிவு செய்யலாம். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சலுசலா மூலமும், இல்லாத இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் கொள்வனவு செய்யப்படலாம். கொள்வனவு செய்யும் பொருட்களை சிறிய லாபத்துடன் அப்பகுதியிலேயே விற்பதுடன், எஞ்சிய பொருட்களை தேவையுள்ள வெளி மாகாணங்களுக்கு அனுப்பும் வசதிகள் செய்யப்பட வேண்டும்:

குறிப்பிட்ட காலத்தில் திறமையாகவும், கூடுதலாகவும் உற்பத்தி செய்த உற்பத்தியாளரின் திறமையின் அடிப்படையில் குறிப்பிட்ட ஒரு சிலரை, அரசாங்கம் நிரந்தரமாக்கி, சிறு குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு வேண்டிய பனம் பொருள் மூலப்பொருட்களை கேள்வி அறிவித்தல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இப்படியான சிறு கைத்தொழில் மையங்கள் பனைகள் கூடிய ஒவ்வொரு பெரும் இராமங்களிலும் அமைய வேண்டும்:

இவ்வாறு அமைந்த தொழில் மையங்களில் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக முன்பு கூறியதுபோல் வெளி நகர்களுக்கு, தேவையுள்ள இடங்களுக்கு அனுப்பப்படவேண்டும். உதாரணமாக சுளகு, விசிறி, கடகம், பனங்கட்டி, ஜேம் என்பவற்றுக்கு கண்டியில் நல்ல தேவை இருக்கின்றது.

இவ்வாறு தொழில் மையங்களை அமைத்து செயல்படும் பொழுதுதான் அங்கு வேலை செய்பவர்களில் திறமையானவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி பயிற்சி அளித்து மேலும் பல புதிய பொருட்களை ஆராய்ச்சி செய்து உற்பத்தி செய்யவழி வகுக்கலாம். பனந் தும்புத் தொழில் இம் மையங்களில் ஆரம்பிக்கப்படலாம். திறமையான வேலையாளர்களிலிருந்து தும்பு பெறப்படும் விதத்தையும், பிர... யும் விதங்களையும் பயிற்றுவிக்க வெளிநாட்டுக்கு அனுப்பலாம்விவசாயப்பட்டதாரிகளிலும் சிலரை வெளிநாட்டுக்கு அனுப்பி ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி, இவர்கள் மூலம் ஒவ்வொரு தொழில் மையங்களையும் சிறந்த முறையில் இயங்க உதவி கொள்ளலாம்.

ஆனால் இன்றோ வெளிநாடு செல்லும் பனம்பழம் சுவை பழகும் பெரியார்கள் வந்து, யாருக்கு, எங்கே, எதை பயிற்சியளிப்பது என்பது யாருக்கும் தெரியாத புரியாத ஒரு திட்டம் என்பது வெளிப்படை.

சிறுவர் தொடங்கி முதியவர்கள் வரை பல்லாயிரக் கணக்கான தொழிலாருக்கு வேலைவசதி.

ஊதியம் பெறும் பெண்கள் சமுதாயம் ஒன்று உருவாகும்.

அறுவடை முடிந்தபின் மறு அறுவடை மட்டும் உழைப்பூதியம் இல்லாத விவசாயிகள் சமுதாயம் ஒருபடி முன்னேறிய, தேறிய வருவாய் உள்ள சமுதாயமாக அமைய உதவியாக இருக்கும்:

பனம்பொருள் உற்பத்தி அதிகரிக்க பனை மரங்களும் பாதுகாக்கப்படும். இதனால் ஓங்கி வளர்ந்த மரங்களால் சீதோஷ்ண நிலை காப்பாற்றப்படும்.

பின்னல் கலை வளர்ச்சி கிராமங்களில் தீவிரமாக வளர ஏதுவாகும்.

ஓய்வு நேரங்களை வீணாகக் கழித்து, குமறங்களையும் ... திய பழக்க வழக்கங்களையும் செய்யும் சமுதாயத்தில் ஒரு பகுதியினரை, தேசிய பொருளாதார முன்னேற்ற அபிருத்தியில் ஒரு பங்காளராக மாற்ற முடியும்:

எனவே இலங்கையில் ஓங்கி வளர்ந்து நிற்கும் பனைவிருட்சங்கள் தேசிய பொருளாதாரத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. அண்மையில் தயாரித்த ஐந்து ஆண்டுத் திட்ட அபிவிருத்தியில் கூட பனம்பொருள் அபிவிருத்தி பற்றி மௌனம் சாதிக்கப்பட்டுள்ளது தமிழர்களுக்குச் செய்யும் பெரிய துரோகமாகும்.

# துடாவை விஜயத்தை பகிஷ்கரித்தனர் நெடுங்கேணி தமிழ் மக்கள்!

## சந்தர்ப்பவாதிகளின் முகத்திரை கிழிந்தது!

அண்மையில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் ஓர் கட்டடத்தைத் திறந்துவைக்க சில சந்தர்ப்பவாதிகளின் அழைப்பின் பேரில் உதவிக் கல்வி அமைச்சர் பி. வை. துடாவை வந்திருந்தார். 1970 மார்கழி தொடங்கி வருகின்றேன் வருகின்றேன் என்று ஏமாற்றிய உதவி அமைச்சர் இப்போது நெடுங்கேணி வந்தது சந்தர்ப்பவாதிகளுக்கு அதிக மகிழ்ச்சிதான். ஏதோ சாதிகக முடியாத ஒன்றைச் சாதித்து விட்டோம் என்ற பெருமையும் கூட.

உதவிக் கல்வி அமைச்சரை அழைத்த உதவாக்கரைகளான சந்தர்ப்பவாதிகளின் அழைப்பை ஏற்றுக்கொள்ளாது அதிகமான பெற்றோர் துடாவைக்கு அளித்த வரவேற்பில் கலந்து கொள்ளாமல் சந்தர்ப்பவாதிகளின் முகங்களில் சவுக்கடிபட்டது போல் தலை குனிய செய்து விட்டார்கள்.

நெடுங்கேணி மகாவித்தியாலய பெற்றோர்—ஆசிரியர் சங் தானும் உதவி அமைச்சரை அழைத்ததாக துண்டுப் பிரசுரங்கள் கூறுகின்றன. ஆனால் வரவேற்பில் கலந்து கொண்டவர்கள் யார்? ஒரு பகுதியினர் வேறு இடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள். ஒரு பகுதியினர், பணத்துக்காக உடலையே விலை கூறி விற்கும் விலைமாதைப்போன்று, உத்தியோகத்துக்காக, இன— மொழி — கொள்கை என்பவற்றை விலை கூறி விற்றுவிட்டு ஆளுங்கட்சியிடம் அடைக்கலம் புகுந்த வாலிபர்கள் சிலர். ஆசிரியர்களின் வற்புறுத்தல்கட்குப் பயந்து வந்திருந்த மாணவர்களின் எண்ணிக்கைகூடக் குறைவுதான். உண்மையில் எனது பிள்ளை நெடுங்கேணி மகாவித்தியாலயகத்தில் படிக்கின்றது.நான் அப்பிள்ளையின் பெற்றோர்தான் என்று உரிமையுடன் கூறக்கூடிய பெற்றோர்களில் விரல் விட்டு எண்ணக் கூடக் காணாத அளவுக்குத் தான் வந்திருந்தார்கள்.

உதவியமைச்சர் திறந்து வைத்த கட்டிடம், அரசாங்கம் ஒன்பதினாயிரம் ரூபா நிதி கொடுக்க மீதி ஆறாயிரம் பெற்றோர்களிடம் சேகரித்த் 1970ம் ஆண்டு தேர்தல் காலத்தில் கட்டப்பட்டுத் கட்டி முடிந்தவுடன் உள்ள டிடத்துக்குள் யாருடமாலை வைக்காமலே வகு... தப்பட்டு வந்தது... ஆண்டு கடைசிப் மறபடி அங்கிருந்த ஆசிரி...க்கு மந்திரியை அழைக்க வேண்டுமென்ற ஆசை வந்தது. திடீரென மேசை—கதிரைகள் அகற்றப்பட்டன. (மேசை—கதிரைகளை அகற்றி விட்டால் புதிய கட்டடமாக மாறிவிடும் என்ற எண்ணம் போலும்.)

அன்று முதல் உதவிக் கல்வி மந்திரி அவர்களை அழைக்கும் படலம் ஆரம்பமாகியது. இதற்காக நெடுங்கேணியில்

**— வவுனியாத் தபால் —**

ஓர் கம்யூனிஸ்ட் கட்சிக்கிளையும் ஆரம்பிக்கப்பட்டது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை நான் ஆதரிக்கவில்லை என்று தனது சாராருடன் பெருமை பேசிக்கொள்ளும், வவுனியா சிவாவின் கையாள் ஒருவர் தலைவராகவும் வேறொருவர் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர், கடைசி நேரத்தில் மனச்சாட்சி இடங் கொடாத காரணத்தாலோ என்னவோ செயலாளர் வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை.

...ல் ...ர ‘துட்டகைமுனு போன்று சிங்கிழர்கள் ஆதிக்கத்தை ... ...க் வர் கூற, சிங்கள-தமிழர் சிங்க... வாழ வேண்டு...று வேறொருவர் கூறி ஈழத்தமிழினத்தை ஏமாற்றித்திரியும் ஆளுங்கட்சியினருக்கு எடுபிடிகளாக விளங்கும் இனத்துரோகிகளின் வரவை இயற்கைதான் பொறுத்திடுமோ? உதவிக் கல்வி அமைச்சரின் வரவுக்காக நெடுங்கேணியில் இருக்கும் சில அரசியல் சூதாட்டவாதிகளான, சந்தர்ப்பவாதிகள் அழகான பந்தலை அமைத்திருந்தனர். அன்றிரவு கருமுகில் கூட்டங்கள் ஒன்றிரண்டு பேரிசைச்சலுடன் பேய் மழை பொழிந்தது அத்துடன் பெருங்காற்றும் வீசியது. காலையில் பந்தல் தரை மட்டமாகக்கிடந்தது.

இனத் துரோகிகளின் பந்தலை இயற்கையே வீழ்த்திய அதிசயத்தைக்கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர். உதவி அமைச்சர் வந்தது் சந்தர்ப்பவாதிகள் திகைத்தனர் எப்படியோ ஒரு சிறு வாடசாலை கட்டிடத்துக்குள்ளேயே கூட்டத்தை கூட்டி முடித்து விட்டார்கள். கூட்ட முடிவில் பேசிய உதவி கல்வி அமைச்சர் சிங்கள—தமிழர் ஐக்கியம் வாழ்க! என்று கூறினார். இப்படியான வார்த்தைகளைக்கூறி இனியும் எம்மை ஏமாற்ற முடியாது என்று யாரோ ஒருவர் கூறிய ஓசையும் கேட்டது.

—(கேணி வண்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் மலர்ந்தது?

**பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் அவனுக்கு இதுதான். கட்டிய மனைவியும் கைகளில் தவழும் குழந்தையும் அவனுக்கு இங்கேதான். ஆனால் இவன் இலங்கைப் பிரசையல்ல, கள்ளத்தோணி!**

...ளையில் தூங்கிக்கிடந்த குழந்தை வீரிட்டு அலறியது. அவள் அதிர்ச்சியினின்றும் விடுபட்டவளாக விழித்தாள்: வாழ்வின் நம்பிக்கைகள் தளர்வடைந்து எண்ணங்கள் தள்ளாடுவதுபோல அவள் நடை பின்னுப்பட்டது: எழுந்துசென்று குழந்தையைத் தூக்கினாள். நைந்துபோன நினைவுகளாக இற்றுப்போன சேலை குழந்தையின் உதைக்குத் தாக்குப்பிடிக்காது கிழிய, அதற்குள் சிக்குப்பட்ட கால்களை மீட்க முடியாது அது கவித்தது. அவள் கால்களை விடுவித்துக் குழந்தையைத் தூக்கி மாரோடு அணைத்தாள். வாழ வழியற்றுத் தவிக்கும் ஏழைகளை ஆரத் தழுவி மகிழும் வறுமையின் அரவணைப்பு அது!

குழந்தை அழுவதை நிறுத்தவில்லை. அது வேறு எதற்காகவோ அழுதது.

அவள் மேற்சட்டைக்குள் மறைந்துகிடந்த தாய்மையின் அங்கங்களை வெளியெடுத்துக் குழந்தையின் வாயில் திணித்தாள். குழந்தை ஒருகணம் அழுகையை நிறுத்தி, பாலை நிலமாகக்கிடந்த அந்த அங்கத்தைச் சுவைத்துவிட்டு மறு...யும் வீரிட்டு அலறியது.

...ளுக்குக் கண்களில் நீர் சுரந்தது. அவளது வெறுமை ...க்குத் தெரியும். பாலை ...ருந்தால்தானே அகப்...ல் வரும்! இறைக்கிற ஊற்றுத்தானே சுரக்கும்! அதுவோ பாண் கிணறு. எப்படிச் சுரக்கமுடியும்?

மூன்று நாட்களாக அவளுக்கு உண்பதற்கு எதுவும் கிடைக்கவில்லை. சூனியமாக ஏகாந்தத்தில் திக்குத்திசை தெரியாது திகைக்கும் சாரதப் பறவையின் தவிப்பு அவளுக்கு. வாழ்க்கையில் இறுதிவரை கைகொடுக்கும் துணையொன்றைத் தன் முயற்சியால் தேடிக்கொண்டாள் அவள். ஆனால், அது தேசியம் என்ற கூற்றுவத்தின் இறகுக்குள் அகப்பட்டு வாழ்க்கையையே வெறுமையாக்கிக் கொண்டபோது, அவள் சூழ்ந்துபற்றும் தீ நடுவில் சிற்றுயிரானள்.

வெளியே பாண்ட் வாத்தியங்களின் இடியோசை காற்றில் மிதந்துவந்து செவிப்பறையில் பேயாக அறைந்தது. குழந்தை மீண்டும் வீரிட்டு அலறியது. அவள் அதனைத் தாக்காட்டும் முயற்சியில் தோல்விகண்டு செயலற்று நின்றாள்.

அவள் ஏழை. இளமையில் வறுமையை அனுபவித்தவள். ஓரளவு படித்தவள்; வாலிபம் அவளுக்கு வனப்பைத் தந்து வசிகரத்தை ஏற்படுத்தியிருந்தது. அது அவளுக்கு ஒரு தாலிப் பாக்கியத்தைத் தானகத் தேடித் தந்தது. அவள் அவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். அறுதல் சொடியும் பீற்றல் பட்டையும் இணைந்தன! ஆம் அவன் ஒரு அனாதை. 'இந்தியத்' தமிழன். எதுவோ ஒரு கம்பனியில் அதி குறைந்த ...தியத்தில் கடமையாற்றி...ன். ஆனால்,—

வாழ்வு அவளுக்கும் இனித்தது. ஒவ்வொர் அனுபவத்தையும் அவர்கள் இதயத்தால் இரசித்துச் சுவைத்தார்கள். மணவாழ்வின் ...ரபரியம் அவர்களுக்கு விளங்கியது. அந்த விளக்கத்தில் தெளிவான வழ...குத்து அணு அணுவாக முன்னேறிய போது......

...ன்னும் அந்த நிகழ்ச்சி ...மையான நீர்ப்...ரப்பின் தெளிவை அவள் மனத்திரையில் வேர்பாய்ச்சி நிற்கிறது.

கடந்த வருடம், இதே நாள், இலங்கையின் இருபத்தி இரண்டாவது சுதந்திரதினம்! நாட்டின் ஒரு பகுதி களியாட்டுக்களில் — இன்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தது. அவர்களது குடிலையின் அண்மையிலுள்ள பெரு வெளியிலும் சுதந்திர தினத்தின் எக்காளிப்பு! அந்த வைபவங்களில் பங்குபற்ற அவர்களும் ஆயத்தமாகிக்கொண்டிருந்த போது...

நண்பனெருவன் அவனை அவசரமாக எங்கோ அழைத்துப்போக வந்திருந்தான். அவனுல் அந்த அழைப்பை மறுக்கமுடியவில்லை. ''கௌசல்யா'', நீ புறப்படுவதற்கு ஆயத்தமாகு, நான் இவனுடன் போய்விட்டு அரை நொடியில் திரும்பி வருகிறேன்'' என்று கூறிவிட்டு அவன் போய்விட்டான்.

அவளைத் தனிமை உறுத்தியது. கடிகாரத்தின் நிமிடமுள் உடும்புப் பிடியில் சிக்கித் தவிப்பது போல நேரம் நகர மறுத்தது. வயிற்றைக் குமட்டுவது போலிருந்தது. நாவில் ஜலம் வேறு சுரந்து கொண்டிருந்தது.

அவள் அடுக்களைக்குள் சென்றாள், தன் கணவனுக்கு தெரியாது மறைத்து வைத்திருந்த மாங்காயுடன் சிறிது உப்பும் எடுத்துக்கொண்டு அறைக்கு மீண்டாள். மாங்காயின் தோலைச் சீவி அகற்றிவிட்டு கீலம் கீலமாக அதை அறுத்து உப்பில் தொட்டு வாயில் இட்டுச் சுவைத்துக் கொண்டிருந்தாள். அதில் ஓர் இரசிப்பு, இலயிப்பு அவளுக்கிருந்தது. அந்த இலயிப்பில் ஆழ்ந்திருந்த போது ......

அறைக்கதவு திடீரெனத் திறந்துகொண்டது. கணவன் நுழைவதைக் கண்டஅவள் மாங்காயைத் தன் சேலைக்குள் ஒழித்துக்கொண்டாள். அவள், அவனை அத்தனை விரைவாக அங்கு எதிர்பார்க்கவில்லை. அவனைக் கண்டதும் அவள் அதிர்ந்துவிட்டாள். திகைப்பில் கை கால் ஓடவில்லை. சிலையாக அமர்ந்திருந்தாள்.

''கௌசல்யா புறப்படுவோமா?''

''......''

''உன்னைத்தான், புறப்படலாமா என்று கேட்டேன்''.

அவன் அவசரப்படுத்தினன்.

அவளுக்கு விழி பிதுங்கிற்று. வாயில் இருப்பதை மெல்லவும் முடியவில்லை விழுங்கவும் முடியவில்லை. எழுந்து நடந்தாலோ கையிலுள்ள மாங்காய் வெளியே தெரிந்துவிடுமென்ற அச்சம். ஒன்றுமே செய்ய இயலாத நிலையில் அவனைப் பார்த்து விழித்தாள்.

அவனுக்கு கோபம் வெடித்தது. தான் கேட்கக் கேட்க அவள் ஒன்றும் பேசாதிருப்பது அவனுக்கு எல்லையற்ற ஆத்திரத்தை மூட்டிற்று, ''என்ன திருடிவிட்டு இப்படி முழிக்கிறாய்'' என்றுகொண்டே அவள் கையை எட்டி இழுத்தான் அவன். அவள் தாபத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவளது கையில்...

அவனுக்கு அவற்றைக் கண்டதும் விஷயம் விளங்கியது. நிலைமை புரிந்தது. அவளை அப்படியே தன் இரு கரங்களாலும் அலாக்காகத் தூக்கினான். அவள் தலை குனிந்தாள். நாண உணர்வு தலையெடுத்து கன்னங்களை... செவ்வானம் சிறை...

''அடி போடீக்கிளியே, இவ்வளவு காலமும் இதை எனக்குச்சொல்லவில்லையே என்றுகொண்டே அவளைத் தனது முகத்துக்கு நேரே உயர்த்தினன். முற்றிப் பழுத்த கொவ்வைக்கனிகள் இரண்டின் வெடித்துப் பிளந்த பகுதிகள் ஒன்றை ஒன்று அணைத்தன.

அந்த நிகழ்ச்சியை அவளால் மறக்கமுடியவில்லை. தன்னை ஒரு முழுமையான பெண்ணாகத் தன் கணவனுக்குத் தெரியப்படுத்திய அந்நாள், வாழ்வில் ஒவ்வொரு பெண்ணும் அடையத்துடிக்கும் அந்த மங்களகரமான ''தாய்மை'' என்ற ஸ்தானத்தை அவளும் அடைந்து கொண்டாள் என்பதை அறிந்து அன்று அவன் அடைந்த மகிழ்ச்சி, அவற்றை நினைத்தபோது எண்ணத்தின் அடித்தளத்தில் ஏற்பட்ட பெருஞ்சுழிப்பில் மனம் கால் இடறி தலைகுப்புற வீழ்ந்து மூழ்கித் தத்தளித்து......

**எமது சிறுகதை**

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள். அந்த இன்ப நாட்கள் அவள் மனதைக் கூரிய வாள்கொண்டறுக்கின்றன. வெளியே இராணுவ வீரர்களின் அணிவகுப்பிற்காகப் பாண்ட் வாத்தியங்கள் பேரொலியில் முழங்கின.

இன்று, இருபத்து மூன்றுவது சுதந்திர தினம். சென்ற வருடம் அவள் சிரித்து மகிழ்ந்தாள்; இந்த வருடம்...

**வன்னி**

அவள் வாழ்வு சூறையாடப்பட்டு விட்டது. முளைவிடுத்த விதையில் செடியாகி, மரமாகிப் பூத்துக் காய்த்து பிஞ்சும் கனியுமாகப் பெருவிருட்சமாகப் பொலிந்து நின்ற அவள் வாழ்வை வேரோடு சாய்த்துத் தீயிலிட்டுவிட்டார்கள். சென்ற சுதந்திர தினத்தின் போது இனித்த வாழ்க்கை இந்தச் சுதந்திர தினத்தின் போது விஷத்தின் கொடுஞ்செயலாய் உடலின் ஒவ்வொரு பகுதியையும் எரித்து வேதனையூட்டிற்று. கள்வரால், காடையரால், காமாந்தகரால் அவள் வாழ்க்கை சூறையாடப்படவில்லை. அவர்களால் ஏற்பட்ட இழப்பிற்கு அவள் நீதிமன்றின் முன் நியாயம் கேட்டிருக்கலாம். இழந்த தன் வாழ்வை மீட்டுக் கொண்டிருக்கலாம். ஆனல்......

வேலியே பயிரை மேய்ந்தது!

சென்றவாரம் அதிகாலை, அவன் அலுவலகத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். வழியனுப்புவதற்காக அவள் குழந்தையுடன் வாசலுக்கு வந்திருந்தாள். தற்காலிகமான அந்தப் பிரிவை நினைத்தபோது, அது அவளை நெருப்பாகச்சுட்டது. அவள் அவனை விழிநிறையப் பார்த்தாள். பார்வைகள் ஒன்றுடன் முட்டிமோதுண்டு தவித்தபோது...... வழமையான பரிசு! அவன் தன் அதரங்களைத் துடைத்துக்கொண்டான்; அவன் ...கையசைத்து ...

அந்த முத்தம் அவனது இறுதிமுத்தமாக இருக்குமென்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. அவன் விடைபெற்றுக்கொண்டபோது தன்னிடமிருந்து என்றென்றுமே விடைபெற்றுக்கொள்வான் எனத் துளியேனும் கருதவில்லை;

அலாதியானதோர் ஸ்வரத்தின் ஒரு சீரான லயஞானம் திடீரெனத் திசை திரும்பி தடம்மாறித் தவிப்பது போல அவள் வாழ்வு அபஸ்வரமாகி நிலையற்றுத் தவிக்கிறது.

தேசியம் அண்மைக் காலத்தில் அந்தகனின் வீராவேசமாக தலைவிரித்துப் பேயாட்டமாடியது. அலுவலகங்களிலெல்லாம் அதிமுக்கியத்துவம் அதற்கு அளிக்கப்பட்டது. இவனது கம்பனி என்ன தேவலோகத்திலிருந்து குதித்ததா?

அலுவலகங்களில் பணிபுரியும் ஒவ்வோர் உத்தியோகத்தனதும் வாழ்க்கை விபரங்களும் சேகரிக்கப்பட்டு மிக நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டது. சுப்பிரமணியத்தினதும் முத்துச்சாமியினதும் வாழ்க்கை வரலாறுகள் சல்லடைபோட்டு ஆராயப்பட்டன. இதைப்பார்த்து கலுபண்டாவும், புஞ்சிநோனவும் வாய்விட்டுச் சிரித்தார்கள். இது, சுதேசியம்!

கௌசல்யாவின் கணவனை அலுவலகத்தில் எல்லோரும் அன்று ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். தங்களுக்குள் ஏதேதோ குசுகுசுத்தார்கள். உயிருக்குயிரெனத் தடித்துப் பழகிய நண்பர்களும் ஒதுங்கி நடந்துகொண்டார்கள். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்களுடைய திடீர்மாற்றத்திற்கு அவனுல் காரணம் காண இயலவில்லை.

மதிய போசனத்தின் பின்னர் அவன் இளைப்பாறும் மண்டபத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். திடீரென நான்கு பொலீஸ் உத்தியோகத்தர் அவன் முன்னிலையில் தோன்றினர், கைகளை நீட்டச் சொல்லினர்; அவன் தயங்கினான். கைகளில் வலோத்காரமாக விலங்குபூட்டி வீதி வழியே அவனை இழுத்துச்சென்றனர்.

கொம்பனித்தெரு கள்ளக் குடியேற்றத் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டுக்கிடந்த 'மந்தைக் கும்பல்களு'டன் அவனுக்கும் ஓரிடம் ஒதுக்கப்பட்டது. உயிருடன் நரகலோகம் அவனுக்குக்காட்சிப் பொருளானது. அதையும் அவன் அனுபவித்தான்; ஆனல்...

அவன் மனம் மட்டும் ஓயாது ஓலமிட்டுக்கொண்டேயிருந்தது. வாழ்க்கையில் தான் செய்த ஒரேஒரு குற்றத்திற்காக அவன் தினந்தினம் அழுதான், அலமந்து

(10-ம் பக்கம் பார்க்க)

## வெந்து போ!

சிங்களத் தோழரெல்லாம் சிங்களம் பேசுகின்றார்!
சிங்களம் எழுதுகின்றார்! சிங்களம் பயிலுகின்றார்!
எங்களின் தமிழரெல்லாம் இன்னுமே ஆங்கிலம்தான்?
தங்களின் செயல்களென்றும் தமிழிலே செய்வதில்லை!

சிங்கள மகனைக் கண்டும் தமிழ் மகன் திருந்தவில்லை!
அங்கவன் வாழ்வைப் பார்த்தும் அவ்விதம் வாழவில்லை!
எங்குதான் போக எண்ணி இவ்விதம் இருக்கின்றானோ?
இங்கிவன் இருந்தால் என்ன? இறந்துதான்போனலென்ன!

தனித்துவம் பேணி வாழ்ந்த தமிழனுக்கிற்றை நாளில்
தனித்துவம் பிடிக்கவில்லை! சமத்துவம் பிடிக்கவில்லை!
இனித்தனதெல்லாம் விட்டு இரண்டறக்கலந்து விட்டா
னெனிற்துயர் ஏதுமில்லை! எவரிலும் பிழையுமில்லை!

தாரணிபோற்ற வாழ்ந்த தனித்துவத் தமிழனெங்கே?
கூரறிவோடு வாழ்ந்த குறள் தரு வீரனெங்கே?
ஏரது போற்றி வாழ்ந்த இலக்கியத் தமிழனெங்கே?
பேரது தமிழன், ஆனல் பேடியாய் வாழ்கின்றானே!

அட தமிழ் மடையா, உந்தன் அறிவினை விற்றுவிட்டாய்?
கிடக்கிறாய் மாற்றான் காலில், கேட்கிறாய் பிச்சை, அஃதை
விட, எரிதழலில் வீழ்ந்து வெந்துபோ, சாம்பலாகு!
நட நட தீயை மூட்ட, நான் வருகின்றேன் போ, போ!

எத்தனை நாளைக்கிந்த இழிசெயல் புரிவாய்? பார்ப்போம்?
பித்தநோய் தீரும்போது பிழையுணர்ந்தடி நா நோகக்
கத்து கத்தென்று கத்திக் கதறியே கண்ணீர் கொட்டிச்
செத்து நீ போகாவிட்டால் செவியினை வெட்டுவேன்யான்!

நான், தொழில், மனைவி, மக்கள், நாலறை வீடு, தோட்டம்
தான் பெரிதென்று வாழும் தமிழனே, தவறுன் வாழ்வு!
ஏன் மொழி—நாடெமக்கு? எவருமே மனிதர் என்றால்
கூன் செவிட்டுமை கல்லினில் குருடனின் வாழ்வுன் வாழ்வு!

மொழி, இனம், நாடு காத்து முறையுடன் வாழு! அன்றேல்
அழிந்துபோ! அழிவுக்கஞ்சி அடிமையாய் மாறி மிக்க
இழிவினைத்தேடிடாதே! எம் இன வரலாற்றேட்டில்
பழிக்கறை பட விடாதே! பணிவுடன் எண்ணிப்பாராய்!

'தாமரைத் தீவான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சோசலிசம்' தந்திட்ட வேதனைகள் போதாதோ? சோக 'இஸம்' தமிழனுக்கு தருவதுவோ சோசலிசம்

## அரசியல் மடல்

( 3ம் பக்கத் தொடர்ச்சி)

னவே அம்பலப்படுத்தியிருந்தோம்—சுதந்திரனில்!

கொழும்பு றோயல் கல்லூரியில் புதிய கல்வித் திட்டத்தை விவாதிப்பதற்காக அண்மையில் கூட்டப்பட்ட கருத்தரங்குக்கான அழைப்பிதழ் தமிழ் தமிழ் பா.உ.க்களுக்கும் தனிச்சிங்களத்திலே அனுப்பப்பட்டது. இதனால் தமிழ் அரசு பா.உ.க்கள் அக்கருத்தரங்கைப் பகிஷ்கரித்தனர்!

O தமிழுக்கு உரிமை எதுவும் தரக்கூடாது என்று இனவெறி கக்கி, பொலிஸ் தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தி-சென்ற அரசாங்கத்தின் காலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகிய ஒரு பௌத்த பிக்குவுக்கு பொழும்பில் நினைவுச்சின்னம் நிறுவி, தமிழை எதிர்த்த அந்த வகுப்பு வெறியனை, தேசபக்தன் 'மொழி காத்த வீரன்' சிறந்த சோசலிசவாதியென்றெல்லாம் போற்றிப் புகழ்ந்தனர் ஐக்கிய முன்னணி அரசின் முப்பெருந் தலைவர்களான திருமதி சிறிமாவோ, பீட்டர் கெனமன், டாக்டர் என். எம். பெரேரா ஆகியோர்!

O அரசாங்க — கூட்டுத்தாபன நியமனங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இராணுவத்துக்கு ஆள் திரட்டுவதிலும், தமிழர் ஒதுக்கப்பட்டனர்.

இதோ சில உதாரணங்கள்!

அரசாங்க எழுது வினைஞர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட 600 பேரில் 66 பேரே தமிழர்கள்!

ரேடியோ ஒருபஸ் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட 24 பேரும் சிங்களவர்களே; தமிழர் ஒருவருமில்லை!

சுகாதார திணைக்களப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களில் தமிழர் எவருமிலர்; 80 பேரும் சிங்களவர்களே!

மருத்துவ ஆய்வு உத்தியோகத்தர் தெரிவில் 28 பேர் தெரிவு செய்யப்பட்டனர்; 28 பேரும் சிங்களவர்களே!

2500 பட்டதாரிகளுக்கு ஆசிரிய வேலை கொடுக்கப்பட்டது; அதில் 103 பேரே தமிழர்கள்!

வருமான வரி திணைக்கள மதிப்பாளர் பதவிக்கு 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர்; அதில் மூவரே தமிழர்!

தமிழர்கள் அதிகமாக சித்தியடைந்துள்ளனர் என்ற ஒரே காரணத்துக்காக 1969ம் ஆண்டு தபால் தந்தி பயிற்சியாளர் பரீட்சை முடிவுகள் உரிய காலத்தில் வெளியிடப் படாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டது. சிங்களவர்களை அதிகமாக தெரிவு செய்வதற்கும், தமிழர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் இந்தப் பரீட்சையின் புள்ளிகள் மீண்டும் "தரப்படுத்தலுக்கு" உள்ளாக்கப்பட்டன.

வெளிநாட்டு நிர்வாகச் சேவைத் தெரிவில் பத்துபேருக்கு ஒருவரே தமிழர்!

பொலிசாரின் பதவி உயர்வில் (சார்ஜண்ட்) 83 சிங்களவருக்கு மூன்று பேரே தமிழர்!

உதவி பொலீஸ் சுப்ரீண்டெண்டாகப் பதவி உயர்வு வழங்கப் பெற்றுள்ள 15 பேரில் ஒருவரே தமிழர்!

சிங்கள மொழிஅறிவு துளியும்தேவையற்ற தமிழ்சிற்றூழியர்கள்பலர் சிங்களமொழி தெரியாத ஒரே காரணத்துக்காக வேலை நீக்கம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

1956ம் ஆண்டுக்கு முற்பட்ட பழைய தமிழ் ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களித்த முன்னைய அரசாங்கத்தின் 700வது சுற்றறிக்கைக்கு முரணாக, இப்போது பழைய ஊழியர்களிடமும் சிங்களத் தேர்ச்சி கோரப்படுகிறது. சிங்களத் தேர்ச்சியில்லை யென்ற காரணத்துக்காக அவர்களது பதவி உயர்வுகள், மூப்பு உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

மக்கள் வங்கிக்கு தெரிவுசெய்யப்பட விருக்கும் 265 லிகிதர்களில் ஆக ஒருவரே தமிழர்!

அரசகருமமொழித் திணைக்களத்தில் தமிழ் மொழி பெயர்ப்பு கண்காணிப்பாளராக ஒரு சிங்களவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்!

O 1966ம் ஆண்டின் தமிழ் மொழிச் சட்ட விதிகளை நாங்கள் அமுல் நடத்தமாட்டோம்; ஆங்கிலம் தெரிந்த தமிழர் தமிழில் கடிதமெழுதினால், அதற்கு தமிழில் பதில் தரமாட்டோம்; ஆங்கிலத்திலேயே பதில் தருவோம்; என்று நாடாளுமன்றத்தில் அழுத்தந்திருத்தமாக கூறினார் அமைச்சர் பீலிக்ஸ்.

O சைவ மக்களின் புனித ஸ்தலமான கோணேசராலயம் அமைந்துள்ள கோட்டைக்கு 'ராஜசிங்கா கொட்டுவ' எனும் சிங்களப் பெயரைச்சூட்ட முனைந்தனர்.

O வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி தமிழாக வேண்டும்; தமிழே தமிழ் பிள்ளைகளின் போதனாமொழியென்பது சட்டத்திலிடம் பெறவேண்டும்; வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களின் நிர்வாக, பதிவு மொழி தமிழாக வேண்டும்; என்று தமிழ் மக்கள் கட்சி வேறுபாடற்று விடுத்த நியாயமான கோரிக்கைகளைக்கூட ஏற்க அரசு மறுத்துவிட்டது!

O தமிழ் பல்கலைக்கழகம், இதோ வருகிறது; அதோ வருகிறது; என்று தபாலமைச்சரும், தமிழ்ப் பகுதியிலுள்ள ஐக்கிய முன்னணி எடுபிடிகளும், தமிழ்ப் பத்திரிகைகளும் கடந்த சில மாதங்களாக தமிழ் மக்களுக்கு கண்ணாமூச்சி காட்டி வந்தன. இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கும் அரோகராவாகிவிட்டது!

● கலாசார அமைச்சு, சிங்கள, தமிழ், இலக்கிய வளர்ச்சியில் அப்பட்டமான பாரபட்சம் காட்டிவருகிறது. சிங்களத்தில் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், மொழிபெயர்ப்பு சிறுவர் நூல்கள், விஞ்ஞான இலக்கியம், தத்துவ சாத்திரம், சரித்திரம், இலக்கியத் திறனாய்வு ஆகிய பத்து துறைகளில் சிறந்த நூல்களை எழுதுவோருக்கு ரூபா பதினோராயிரத்தை ஆண்டுதோறும் பரிசாக வழங்கும் கலாசார அமைச்சு, தமிழிலோ ஆக புனைகதை, கவிதை, நாடகம் ஆகிய மூன்று துறைகளுக்கு மட்டும் ரூபா நாலாயிரம் பரிசு வழங்குவதற்கு ஒதுக்கியுள்ளது. அதிலும் இந்த ஆண்டு (1971) தமிழ்த் துறைகளுக்கு ரூபா 2000/- மட்டுமே பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது—

● தமிழ்மொழிக்குள் சிங்களச் சொற்களை திணித்து, தமிழை சிங்கள மயமாக்கும் திட்டமிட்ட சதி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது! லக்சல, சல்பில, ஜாதிக சம்பத, சிப வச, சலுசல, ஸ்ரீலங்கா, லங்காசம், ஜனதா போன்ற ஏராளமான சிங்களச் சொற்கள் இப்போது தமிழ்மொழியில் திணிக்கப்பட்டுள்ளன.

● தபாலமைச்சினால் வெளியிடப்பட்ட, முதல்நாள் தபாலுறைகளில் தமிழ் ஒதுக்கப்பட்டது. ஐ. மு. அரசு பதவிக்கு வந்ததைக் கொண்டாடுமுகமாகவும் பாப்பரசரின் இலங்கை விஜயத்தை நினைவுகூருமுகமாகவும் வெளியிடப்பட்ட முதல்நாள் தபாலுறைகளில் தமிழ் முற்றாக ஒதுக்கப்பட்டிருந்தது. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்ப் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களும் பாடசாலைகளும், அரசடணிக் கடிதங்களுக்கு தமிழில் தங்கள் பெயரச்சு முத்திரைகளைப் பயன்படுத்தினால் அவற்றை ஏற்கக்கூடாதென்று தபால் அலுவலகங்களுக்கு தபாலமைச்சு உத்தரவிட்டுள்ளது. சிங்களத்திலேயே பெயரச்சு முத்திரை இருக்கவேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுகிறது!

● தமிழ்ப் பகுதிகளிலுள்ள அரசாங்க அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் பொதுமக்கள் பயன்படுத்தும் படிவங்கள் கூட பெரும்பாலும் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன. இதனால் தமிழ் மக்கள் அடைகின்ற துன்பங்களோ அளப்பில!

● சிங்களவர்களே இந்த அரசை உண்டாக்கியவர்கள்: வைத்தியவசதிகள் அனைத்தும் சிங்களவர்களுக்கே செய்து தரப்படவேண்டும்; தமிழர்களின் வைத்திய செலவுகளுக்காக பெருந்தொகை பணத்தை ஒதுக்குவதேன்? என்று நாடாளுமன்றத்தில் விஷம் கக்கினார் ஓர் ஆளுங்கட்சி உறுப்பினர். உயிர் காப்பதிலும் இனவெறி உட்புகுந்துவிட்டது!—

● 1971-72ம் ஆண்டுக்கான சுகாதார திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில், வட இலங்கையில் ஆக ஒரேயொரு "பிண அறை" கட்டுவதற்கு மட்டுமே பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது!

● மரவரியொழிப்பை கொண்டுவந்ததன் மூலம் ஏறத்தாழப் பதினையாயிரம் சிறுபான்மைத் தமிழர்களின் வயிற்றிலடிக்கப்பட்டிருக்கிறது!

● இலங்கை வங்கியினர் தமிழ் மக்களுடன் சிங்களத்திலேயே தொடர்புகொள்ளுவோம் என்று மொழிவெறியை கிளப்புகிறார்கள்!

நண்பா, மேலே நான் சுட்டிக்காட்டியிருப்பவை நமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் மிகச் சில! எல்லாவற்றுக்கும் மேலாக, இந்நாட்டுத் தமிழினத்தை மீளா அடிமைப்படுகுழியில் வீழ்த்தும், தனிச்சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசியலமைப்பு திட்டம்கொண்டுவரப் படவிருக்கிறது இந்த ஆண்டில்!

தமிழர்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்காத—தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான தமிழரசுக்கட்சியின சம்மதத்தைப் பெறாத—புதிய அரசியல்திட்டத்தை முற்றாக நிராகரித்துவிட்டுத் தமிழ்மக்கள் தமது விடுதலைக்காகப் போராடவேண்டிய நிலையில் இருக்கிறார்கள் இன்று!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

---

## சுதந்திர...

( 9-ம் பக்கத் தொடர்ச்சி)

செயலற்றுத் தவித்தான். அது..., தன் பூர்வீக வரலாறு தெரியாது ஒரு தமிழ்ப் பெண்ணை மணமுடித்தது தான்! அது சட்டத்தை மீறிய செயலென்று அவன் அன்றுதான் அறிந்தான். முன்னரே அது தெரிந்திருந்தால், இன்று இரண்டு உயிர்கள் வாழ்வழியற்று, நாதியற்று நடுத்தெருவில் நின்று தத்தளிக்க நேர்ந்திருக்காது. அதை அவனால் தவிர்த்திருக்கமுடியும்.

வாலிபத்தின் வாயிலே பூத்துப் பொலிந்து வாழத் துடிக்கும் இளம் மனைவி, அவளது கைகளிலே கிடந்து தவிக்கும் பால்மணம்மாறாத பச்சிளங்குழந்தை. அதை நினைக்கும் போதெல்லாம் அவன் தன்னை மறந்து வாய்விட்டு 'ஓ ஓ'வெனக் கதறி அழுதிருக்கிறான்!

அன்றொருநாள்: எவ்வளவோ இரந்து மன்றாடிக் கேட்டதின்பின்னர் அவனைத் தடுப்புமுகாமிற்குச்சென்று அவனைப் பார்ப்பதற்கு அனுமதித்தனர். அவள் கைகளில் குழந்தையுடன் உள்ளே நுழைந்தாள். ஆனால் பாதி வழியிலேயே தடுத்துநிறுத்தப்பட்டாள். ஐம்பது அடி தூரத்திற்கு அப்பால் நின்று அவனைப்பார்ப்பதற்கு அவள் அனுமதிக்கப்பட்டாள்; இருவரையும் அருகருகே பார்க்க விட்டுப் பின்னர் பிரித்து வைப்பது மனிதத் தன்மையற்றசெயலாம். அதனால் தூரநின்றே அவனைப் பார்க்க விட்டார்கள்!

அவன் விம்மினான். அவன் வெம்பினான். தன்முன் குறுக்கே விழுந்து கிடந்த கம்பிகளைப்பெயர்த்தெறியவெறி கொண்டு அதை இழுத்த போது அது அவனைப்பார்த்து ஏளனமாக நகைத்தது.

அவள் வெளியே இழுத்துச் செல்லப்பட்டாள்: அந்த நேரம்... அந்த நேரம் தான் பெற்ற குழந்தையை அரவணைப்பதற்காகத் தன் கைகள் இரண்டையும் நீட்டிப் பரிதாபமாக அவன் ஓவென்று அலறினான்...

அவள் கதறியகுழந்தையை ஏணையில் வீசினான். உணர்வுகள் வெறி கொண்டு பேயாட்டமாடின. கணவனின் இறந்த காலமும் குழந்தையின் எதிர்காலமும் அவள் கண்முன் பயங்கரமாகத் தலைவிரித்தாடின.

அவனது தகப்பன் ஓர் 'இந்தியன்.' அவனுக்கு வாக்குரிமை இருக்கவில்லை. அதனால், இவனுக்கும் வாக்குரிமை மறுக்கப்பட்டது! அதன் பயன்...

அவன் ஒரு கள்ளத்தோணி எனக் குற்றம் சுமத்தப்பட்டான். அதன் பிரகாரம் ... கடத்தப்பட்டான்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் அவனுக்கு இது தான். கட்டிய மனைவியும் கைகளில் தவழும் குழந்தையும் அவனுக்கு இங்கேதான். ஆனால் இவன் இலங்கைப் பிரஜையல்ல, கள்ளத்தோணி!

ஒவ்வொருவரும் அடிமைத் தளையிலிருந்து அந்நியரின் அழுங்குப்பிடியிலிருந்து மீட்கப்பட்டு சர்வ சுதந்திரத்துடன் இன்பமாக வாழுவதற்கு வழிவகுத்த சுதந்திர தினத்தின் இருபத்து மூன்றாவது பெருவிழா வெளியே திருவிழாவாக விமரிசையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒருபுறத்தில் மரண ஓலம் மறுபுறத்தில் மதுர கீதம்! இது தேசியம், சர்வ சுதந்திரம்!

அவள் எழுந்தாள். குழந்தையை முத்தமிட்டாள். கைகளில் கூரிய கத்தி மறைந்து கிடந்தது வெளியே நடந்தாள். ஒன்றன் பின் ஒன்றாக அதிர்ந்த பீரங்கி வேட்டுக்கள் மரண ஊர்வலத்தில் கொழுத்தப் படும் வெடியாக அவளது காதுகளில் அதிர்ந்தது. வீராவேசத்தை யூட்டும் பாண்ட் வாத்தியங்கள் மரண கீதமாக ஒலித்தன. வீரர்களின் அணி வகுப்பு பிரேத ஊர்வலமாக அவளுக்குத் தோன்றிற்று. விழா மைதானத்தின் மத்தியிலே தேசியத்தின் சின்னமாக—சுதந்திரத்தின் சொரூபியாக சிங்கக்கொடி காற்றிலே அசைந்து ஆடியது.

அவள், அதை நோக்கி அணு அணுவாக முன்னேறினாள். ...க்கையில் எவ்வளவு தூரம் தன்னம்பிக்கை இழந்து தவித்தாளோ அவ்வளவுக்கு மரணத்தில் நம்பிக்கை கொண்டு அவள் அதை நோக்கி முன்னேறினாள்.

• (வாவும்-கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ா ஆசிரி...

(...க்கத் தொடர்ச்சி)

...முன் நடத்தியது அனை ... அறிந்ததே.

...கு மாகாணத் தமிழ் ...ரும் சிங்களம் படிக்கி ...ளே, நாமும் படித்தால் ... என்ன என்றொரு ... வடபகுதித் தமிழர் ...ம் தூண்டிவிட்டு சிங்க ... படிப்பதில்லையென்ற ...த்தை முறியடிப்பதற் ...ப்பிரச்சாரம் நடத்தப் ...து.

...பினும், இப்பொய்ப் பிர ...ம் இப்போது அம்பல ... குட்டு உடைந்து ...டது. நாடாளுமன்றத் ... வரவு செலவுத் திட்ட ...தத்தின்போது உரை ...றிய கல்குடாப் பிரதி ... திரு. தேவநாயகம், ... தொகுதியிலுள்ள ...சாலைகளில் ஒரு சிங்கள ...யர் தானும் இல்லை ...ற உண்மையைப் பகிரங்க ...க் தெரிவித்தார்.

அதே போல பட்டிருப்புப் பிரதிநிதி திரு. தம்பிராசா ...வும் பட்டிருப்புத் தொகு ...திப் பாடசாலைகளில் ஒரு சிங்கள ஆசிரியர் தானும் இல்லையென்று அழமாட்டாக் குறையாக 11-12-71 திக ...திய 'தினபதியில்' கூறியிருக் ...கிறார்—

ஆக, கிழக்கு மாகாணத் ...மிழ் பாடசாலைகள் அனைத் ...தும் சிங்கள ஆசிரியர் ...க்கப்பட்டு விட்டனர் ... கூற்று இப்போது ...ய்யாகி விட்டதல்லவா?

...ரத்தமிழர்—மானத் தமி ... வாழும் கிழக்கு மாகா ... ஒருபோதுமே சிங்களத் ... வரவேற்காதென்பதே ... உறுதியான நம்பிக்கை ...ம்.

## ...ாசாரப்...

(...ம் பக்கத் தொடர்ச்சி)

...து. 'கல்கியும், ஆனந்த ...னும், கலைமகளும், தீப ... குமுதமும், மஞ்சரியும், ...ம்படமும், பொம்மை ... கல்கண்டும், கண்ண ..., அம்புலிமாமாவும், ...மணிக்கதிரும், கடைக ... காட்சி தருவதே ஒரு ... அழகாக இருக்கும்:

"ஆனால் இப்போதோ ...குமாரசூரியர் இவற்றுக்கு ...தடைவிதித்த பின்னர்— தமிழ்ப் பத்திரிகைக் கடைகள் எல்லாம் களை இழந்து கலாசாரப் பாலைவனமாக காட்சியளிக்கின்றன: தமிழ் வாசகர்கள் பத்திரிகைக் கடைகளைப்பார்த்து பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டே குமாரசூரியரை ஒரு திட்டுத் திட்டி விட்டுச் செல்வதை எந்த ஒரு பத்திரிகைக்கடைக்கு அருகில் நின்றாலும் காணக்கூடியதாய் இருக்கிறது."

—இவ்வாறு தமிழ் வாசகர் ஒருவர் சுதந்திரன் திருபரிடம் அண்மையில் மனமொடிந்து கூறினார்.

## தலையிருக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் அறிக்கை எதும் விடவில்லை.

இந்தியாவில், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ...ங்களாதேஷ் பிரதமருக்கு பாராட்டுத் தெரிவித்திருக் கிறது: ... ந்த ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் யாருடைய அதிகத்திலுள் ளது, தெரியுமா? கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திலுள்ள தொழிற் ...சங்கம் இது.

பங்களா தேஷை வெளி வெளியாக ஆதரித்திட இந் ...நாட்டுக் கம்யூனிஸ்ட் கட் ...சிக்கு முதுகெலும்பில்லை. அத ...ல் தொழிற் சங்கத்தைத் ...ட்டிவிட்டு வாழ்த்து அனு ...ப்பியிருக்கிறார்கள் போலும்!

இது தலையிருக்க வாலாடும் அதிசயம், இல்லையா?

## நினைவில் நிற்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியது என் செவிப்பறையில் இன்றும் எதிரொலிக்கின்றது. 'ஐயா, உங்களுக்குரிய அத்தனை மதிப்புடனும் கூறுகிறேன்: நீங்கள் செய்தது மிகப்பெரிய தவறு' என்றார்.

### தோல்வியில் வெற்றி:

"தில்லை வெளியினில் சேர்ந்து விட்டாலவர் திரும்பியும்வருவாரோ என்று நாடாளுமன்ற உறுப்பான்மை பெற்ற தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினரைப்பற்றி அண்ணன் துரைரத்தினம் முன்பு கூறுவதுண்டு. டொக்டரைப் பொறுத்தவரை தமது பதவியை தில்லை வெளியாக அல்ல, யாழ்ப்பாணத்து வல்லைவெளியாகக்கூட மதித்தவரல்ல. தமிழ் மக்களின் கிளர்ச்சிக்கு அது உதவுமானால் நமது பதவியைக்கூடத் துச்சமாக மதித்துத் தூக்கி யெறிந்துவிட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நாடாளுமன்றத்தைவிட்டு வெளியேறத் தயாராயிருந்தவர். 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அமைதியுடன் ஏற்றுக்கொண்டார்: எனினும், மக்கள் தம்மை நிராகரித்தனரா என்ற கேள்விக்குறி அவர் மறைவு வரை அவரின் மனதில் முள்ளாகக் குத்திக்கொண்டிருந்ததை அறிவேன். அத்தேர்தலில் டொக்டருக்கு விழுந்த வாக்கு ஒன்றுகூட கள்ளுக்கோ, சாராயத்திற்கோ, காசுக்கோ வாங்கப்பட்டதல்ல. தேர்தல் வேலைகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்களுக்கு வேளா வேளைக்கு வெறுந்தேநீர்கூட கிடைத்ததில்லை. நல்லூர்த் தொகுதியில் நாகநாதனுக்கு வாக்களித்தவன் ஒவ்வொருவனுடைய கையும் கறைபடியாத கை. நாகநாதன் தூய்மையாகத் தோற்றான்: இதனால் தார்மீக வெற்றி அவனுக்கே.

(வளரும்)

## தமிழ் கம்யூனி...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

தமிழ் மக்களிடையே கம்யூனிஸ்ட் கட்சி பிரசாரம் செய்யும்.

தமிழ் மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து அவர்களிடையே சோர்வையும், 'நம்மால் ஏதுமாகாது' என்ற சலிப்பையும் ஏற்படுத்துவதன் மூலம் சிங்களத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதே கம்யூனிஸ்ட் கட்சிப் பிரசாரத்தின் நோக்கமாம்.

"வங்கதேச மக்களின் அபிலாஷையாகிய சுயநிர்ணய உரிமையை, ரஷ்ய கம்யூனிஸ்ட் ஆட்சி ஆதரித்து அவர்களது விடுதலைப் போருக்கு உதவி புரிகிறது; ஆனால் ஈழத்திலோ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை எதிர்த்தும், சிங்கள ஒற்றையாட்சியை ஆதரித்தும் ரஷ்ய சார்பு கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்யப்போகிறார்கள். இது என்ன கொள்கைக் குழப்பமோ?"

—இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கு குறித்து அதிருப்தியடைந்துள்ள வாசகர் ஒருவர் சுதந்திரன் திருபரிடம் கேட்டார்!

## பங்களா தேஷ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆனால் மலைநாட்டுத் தமிழர் சார்பில், நாடாளுமன்றத்தில் நியமன உறுப்பினராக இருக்கும் ஜனாப் அஸீஸ் அவர்கள் மட்டும் பங்களாதேஷ் பிரச்சினையில் மூச்சுக்கூட விடாமல் இருப்பதேன்? ஐ. தொ. கா. சார்பில், மலையகத் தமிழர் சார்பில்— பங்களாதேஷுக்கு பாராட்டுத் தந்தி அனுப்ப ஜனாப் அஸீஸ் முன்வருவாரா?"

—இவ்வாறு ...ளர் தோட்டத் தொழிலா...ளர்கள்.

## குரும்ப சிட்டியின் முதல் வழக்கறிஞர்



தெல்லிப்பழை குரும்பசிட்டியைச் சேர்ந்த இளம் வழக்கறிஞரான திரு. கந்தையா வேலுப்பிள்ளை மகாதேவன் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் வழக்கறிஞராகவும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசாகவும் கடமையாற்றி வருகிறார்.

இதுவரை காலமும் கொழும்பில் கடமையாற்றி வந்தவர் திரு. மகாதேவன் என்பது குறிப்பிடத்தக்கது:

தெல்லிப்பளை குரும்பசிட்டியைச் சேர்ந்த மு. க. வேலுப்பிள்ளை தம்பதிகளின் மகனை இவர், குரும்பசிட்டியைச் சேர்ந்த முதல் வழக் வழக்கறிஞராவர். இவர் குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் சங்கத்தின் தலைவராகப் பல தடவைகள் கடமை ஆற்றியதோடு தற்போது அதன் செயலாளராகவும் விளங்குகிறார்!

## மோசடி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

லும் ரூபா 7500/-க்குமேல் போகாது—ஆனால் கணக்கிலோ வெள்ளையடித்தல், திருத்த வேலைகளுக்கு ரூபா 26,396/- செலவு என்று கணக்கு காட்டப் பட்டுள்ளதே!

"கதிர்காம அற நிலைய கணக்கு வழக்குக்கு பொறுப்பான அதே பெருச்சாளி முன்பு கொழும்பில் அதே அற நிலையத்தின் சார்பில் ஒரு மண்டபம் கட்டிய போது சுமார் 4 இலட்சம் மதிப்பிடப் பட்ட அம்மண்டபத்துக்கு 14 இலட்சம் என்று கணக்கு காட்டினரே!

"இதையெல்லாம் குறித்த அற நிலைய தர்ம கர்த்தாக்கள் விசாரிக்கப்போகிறார்களா அல்லது 'ராமா—கிருஷ்ணா' என்று பேசாமலிருக்கப் போகிறார்களா?

—இவ்வாறு கதிர்காமத்திலிருக்கும் முருக பக்தர் ஒருவர் சுதந்திரன் திருபரிடம் கேட்டார்.

## செய்தி சிதறல்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பறிபோனது; தலைவரின் மருமகனை வேலை தேடி ஓடியது; பத்திரிகை விற்பனையாளராக வேலை செய்து வந்த தமிழ் இளைஞனின் வேலையைப் பறித்தது; இவை ஏன் ஏன் என்ற கேள்விக்கு பதிலளிக்க முடியாது திருட்டு விழி விழிக்கின்றதாம் இச் சோசலிசக்கும்பல்!

## அரியலமைப்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட மூல அரசியல் சட்டமே அதிகார பூர்வமானதாக ஏற்றுக் கொள்ளப் படும்.

இது ஒன்றே தமிழர்களின் ... மனப்பான்மை ...த்தெளிவாக்க் காட்டுகிறதல்லவா?

# லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

வெளியிட்டவர்கள்:—
நியூ லீலா அச்சகம்,
33, சென் செபஸ்தியன் ரேட்,
கொழும்பு-12.
விலை:— ரூபா மூன்று.

தமிழுலகின் தனிச் சிறப்பு பெற்ற லீலா பஞ்சாங்க சித்திர நாள்காட்டி கிடைக்கப் பெற்றோம். நியூலீலா அச்சக அதிபர் திரு. ச. த. சின்னத்துரை ஜே. பி. அவர்கள் தாமே தனி அக்கறை எடுத்து லீலா பஞ்சாங்க சித்திர நாள் காட்டியைத் தயாரிப்பதால் ஆண்டுக் காண்டு புது மெருகுடன் இந்நாள்காட்டி சிறப்புற்று விளங்குகிறது.

1714-ம் ஆண்டின் தமிழ் மொழி எழுத்து ...டிவத்தையும் தமிழர்கள் இன்று மறந்து வரும் இலக்கங்களையும் நாள் காட்டியைப் புரட்டியவுடன் தொடக்கத்தில்காண முடிகிறது. ஈழத்து, இந்திய தமிழறிஞர்கள், புலவர்கள், உலக அரசியல் தலைவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், வரலாற்று விற்பன்னர்கள், விஞ்ஞான மேதைகள், சமூக சேவகர்கள், சமயத்துறை மேதைகள், மறைந்த தமிழரசுத் தலைவர்கள், ஆகியோரது நினைவு தினங்கள், உலக வரலாற்றுச் சம்பவங்கள் நடைபெற்ற தினங்கள், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய விசேட தினங்கள், உட்பட சகல முக்கிய விடயங்களும் சித்திரங்களுடன் சித்திரிக்கப்பட்டுள்ள இந் நாள் காட்டியை ஒரு கலைக் களஞ்சியம் என்று கூறலாம். ஒவ்வொருநாளுக்கும், நாள் காட்டியின்அடியில் தரப்பட்டிருக்கும் ஒவ்வொரு பொன் மொழியும், திருக்குறளும், பாரதி, பாரதிதாசன் கவிதை வரிகளும் அறிவூட்டுவன.

ஒவ்வொரு தமிழ் குடும்பத்துக்கும் உற்ற தோழனாக விளங்கக் கூடியதாக லீலா பஞ்சாங்க சித்திர நாள் காட்டியைத் தயாரித்து தந்திருக்கும் திரு. சின்னத்துரைக்கு தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது:

### லீலா பஞ்சாங்க மாத கலண்டர்

லீலா பஞ்சாங்க மாத கலண்டரில் இராகுகாலம், சுபநேரம், திதி நட்சத்திரம், யோகம், விரதம், விசேட தினம், நற்குறிப்பு ஆகிய சகல விஷயங்களும் தரப்பட்டுள்ளன. இம் மாதக் கலண்டர் வீட்டில் இருந்தால் வேறு பஞ்சாங்கமே தேவையில்லையென்று கூறலாம்.

### லீலா பஞ்சாங்க தினக் குறிப்பு —1972

• ஒரு நாளைக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ள இத் தினக் குறிப்பில் நாள்தோறும் பஞ்சாங்க விபரங்கள் யாவும் தரப்பட்டுள்ளதுடன், விடுமுறை நாட்கள், அரசாங்க விடயங்கள், இந்து, கிறித்தவ, இஸ்லாமிய பெருநாட்கள், குருபூஜைகள், தபால் தந்தி விபரங்கள், யாவும் இடம் பெற்றுள்ளன.

### லீலா தினக்குறிப்பு—1972

இரண்டு நாட்களுக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும் இத்தினக் குறிப்பில் லீலா பஞ்சாங்க தினக் குறிப்பில் இடம் பெற்றுள்ள விபரங்கள் யாவும் தரப்பட்டுள்ளன. பென்சிலுடன் கூடியது.

### லீலா டெஸ்க் டயறி

ஒரு நாளைக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ள லீலா டெஸ்க் டயறியில் விடுதலை நாட்கள் சமய தினங்கள், அரசாங்கத்தைப்பற்றிய தகவல்கள், தபால் விபரங்கள் இ. போ. ச. விபரங்கள், பிரயாணடிக்கட் விபரங்கள், அளவை விபரங்கள், யாவும் தரப்பட்டுள்ளன.

## ஒருவரிச் செய்திகள்

★ மூப்பூர் நாறு, திருமலை நோறு, என்ன வாறு? பெரிய இடத்திற்குப் பெட்டீசம் போனது உண்மைதானு?

★ மட்டூரில் ராசா நீ மாட்டிக்கிட்டாய் ஜோராய், செருப்பு காலிலே போட்டாலென்ன, கன்னத்திலே பட்டா லென்ன? இது ஒண்ணும் புதிசில்லையே உனக்கு ராசா!

★ ஒவ்வொரு தொழிலாளியும் செருப்புப் போடும் நாள் வரை செருப்புப் போடுவதை ஒத்திவைத்த அண்ணு அதேபோல் சீதனம் வாங்குவதையும் ஒத்தி வைத்திருக்கலாம். அது சோசலிசம் இது கலியாணலிசம்!

★ சுருட்டுத் தொழிலாளருக்கு ஊதியம் கூடினால் வரவு செலவுத் திட்டம் பாதிக்கப்படும், தலைவருக்கு தலைவலி வரும் என்கிறார் தோழர் சண்டியன் நாதன்!

★ முதலில் நீலக் கொடி தூக்கிய துரைராசாவை இருக்க இடமு தெரியாமல் செய்துவிட்டார் துரோகப்பர். இதே முடிவுதான் அவருக்கும் ஏற்படுத்தப் போவது "வெள்ளையப்பர்"

## தமிழரசு மாணவர் முன்னேற்றக் கழகம்!

மொழி, இன விடுதலை உணர்ச்சி மிகுந்த தமிழ் பேசும் மாணவர்களை அனைத் திலங்கை ரீதியில் ஒன்று படுத்தி ஒரு கட்டுப்பாடான இயக்கமாக 'இலங்கைத் தமிழரசு மாணவர் முன்னேற்றக் கழகம்' எனும் ஓர் அமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த அமைப்பில் சேர விரும்பும் மாணவ, மாணவிகள் தங்கள் பெயர், வயது, படிக்கும் வகுப்பு, பாடசாலையின் பெயர் ஆகிய விபரங்களுடன், 'அமைப்பாளர் இலங்கைத் தமிழரசு மாணவர் முன்னேற்றக் கழகம், 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12. எனும் முகவரிக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


வாழ்த்துக்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள் விற்பனையாளர்கள், பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது புது வருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் என்டடெயின்மென் ஸ்தாபனத்தின் புதுவருட வாழ்த்துக்கள்



2வது வெற்றி வாரமாக

செண்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திர

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்

விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி

வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்) சவாலே சமாளி

---

சிலோன் தியேட்டஸ்சாரின் புதுவருட வாழ்த்துக்கள்

5வது வாரமாக காட்சி தருகின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) மற்றும் சிலோன் தியேட்டஸ் திரைகளில்

சிவாஜிகணேசன், சாவித்திரி, நாகேஷ், நம்பியார்

எஸ். வி. ரங்கராவ், சந்திரகலா, ஸ்ரீகாந் நடித்த

பிராப்தம்

19/1/72

தயாரிப்பு—டைரெக்ஷன்: சாவித்திரி

---

இரசிகப் பெருமக்களுக்கு சினிமாஸ் ஸ்தாபனத்தின் புதுவருட வாழ்த்து

இப்பொழுது 8வது வாரமாக காட்சியளிக்கின்றது



கெப்பிட்டல்—பிளாசா—வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்நகர்)

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா,
நம்பியார், அசோகன், சோ,
முத்துராமன், விஜயலலிதா,
டி. கே. பகவதி, கீதாஞ்சலி, விஜயநிர்மலா

நடித்த என் அண்ணன்

(ஈஸ்மன் கலர்)

இப்பொழுது 2வது வாரமாக காட்சி தருகின்றது

லிடோ (யாழ் நகர்)

விஜயா (மட்டுநகர்)

லக்ஷ்மி (திருமலை)



இலங்கையில் 22 வருடங்களுக்கு முன் நடந்த ரேவ்கிளப் பண மோசடி

சிங்கிரி புரொடக்ஷன்
தமிழில் அளிக்கின்றார்கள்

நான்கு லட்சம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் ஜனவரி மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org